மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

**Focus**

## தேவை கட்டணமில்லா கல்விமுறை

- Dr. S.S. இராஜகோபாலன்

அரசியல் சட்டப்பிரிவு 21–A–வின் படி 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச, கட்டாயக் கல்வியை அரசு அளிக்க வேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கான மசோதா மாநிலங்கள் அவையில் வைக்கப்பட்டு நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளது. அக்குழு பொது மக்கள் கருத்துகளைக் கோராமலேயே தனது அறிக்கையினை இறுதி செய்து விட்டதாக அறியப்படுகிறது. அடுத்து வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் மசோதா நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனநாயக நெறிமுறைகளை என்றோ நமது ஆட்சியாளர்கள் கைவிட்டாயிற்றே!

அனைவருக்கும் இலவச, கட்டாயக் கல்வி என்ற நிலையினின்று வசதிக்கேற்ற பள்ளி என்பதனை மசோதா ஏற்றுக் கொண்டுள்ளது. இலவசக் கல்வி அளிக்கும் பள்ளிகளுடன் கட்டணம் செலுத்திப் படிப்பதில் என்ன தவறு என்றே பலரும் நினைக்கின்றனர். அரசியல் சட்டத்தின் உயிர்நாடி சமத்துவம் மற்றும் சமநீதி ஆகியவை. கல்வி அளிப்பில் உள்ள பாகுபாடு அரசியல் சட்டத்திற்கு முரண்பட்டது. மேலும் பள்ளி செல்லும் குழந்தைகள் உள்ளோர் மட்டுமே கல்விச் செலவை ஏற்பது என்பதற்கு மாறாக அனைத்து வசதி மிக்கோரும் வரிகள் மூலம் கல்விச் செலவை ஏற்பதே பொருத்தமாகும். இன்று கல்வி ஒரு சேவை என்ற நிலையின்று ஒரு வாணிபமாக மாறி விட்டது. மழலையர் கல்வி முதல் உயர்கல்வி வரை வணிகமயக் கல்விக்கூடங்கள் பல்கிப் பெருகியுள்ளன.

கல்வி வணிகர்களின் பணப்பசிக்கு எல்லை இல்லை என்பதை தினமணி தலையங்கம் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது. ஒரு பிரபல பள்ளியில் மழலையர் வகுப்புகளில் மட்டும் 800 குழந்தைகளைச் சேர்க்கின்றார்கள். ஆண்டுக் கட்டணமாக ரூ.25,000 வீதம் ரூ.2 கோடி வருமானம் கிடைக்கிறது. 32 ஆசிரியர்களுக்கு தலைக்கு ரூ.1500 முதல் ரூ.2500 வரை ஊதியம் வழங்கப்படுகிறது. இதர செலவுகள் ரூ.2 லட்சம் என்றாலும் ஆண்டிற்கு ரூ.1.9 கோடி லாபம் கிடைக்கிறது. இது மழலையர் வகுப்புகளில் மட்டுமே. இதைவிடப் பெரிய வணிகம் இருக்க முடியாது. எனவேதான் ஆலைகளை மூடி கல்விக் கூடங்களாக மாற்றும் போக்கு அதிகரித்து வருகிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பதைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் என்ன மனித நேயத்துடன் கல்வி அளிக்கப்போகிறார்கள்? இந்நிலையை மாற்ற வேண்டுமெனில் கட்டணமில்லாக் கல்வி முறை ஒன்று தான் வழி.

கோத்தாரிக் கல்விக் குழுவும் பிற கல்விக் குழுக்களும் பொதுப் பள்ளி முறை, அருகாமைப் பள்ளித்திட்டம் ஆகியவற்றை வலியுறுத்தியுள்ளன. ஆனால் மசோதா

CHILDREN'S VOICES
*for* Human Rights
53
2009

இவற்றைப்பற்றி பேச்சு மூச்சுக்கூட விடவில்லை. இவை சமூகத்தின் அனைத்துப்பிரிவினரும் ஒன்றாகக் கற்கும் வாய்ப்பினை உருவாக்கும். பல்லாண்டுகாலமாக இந்நிலை தானே இருந்தது. அதனை மீண்டும் கொணர வேண்டும். சமூகத்தின் ஓர் அங்கமாக பள்ளிகள் இயங்கும்பொழுது பள்ளியின் வளர்ச்சியிலும், செயல்பாட்டிலும் சமுதாயம் மிகுந்த அக்கறை கொள்ளும். அரசுப்பள்ளிகள் சிறப்பான கல்வி அளிக்கும் மக்கள் பள்ளிகளாகச் செயல்படும். பொதுப்பள்ளி முறை அரசிற்கு மிக்க பணச் சுமையை ஏற்படுத்துமே என்றும் சொல்லப்படுகிறது. இன்று பொருளாதாரச் சுணக்கத்தைச் சரிசெய்ய பல்லாயிரம் கோடி ரூபாய் தருகிற அரசிடம் பணமில்லை என்பதே பொய். நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்த்தியாசென் கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி ஒரு மூலதனம் தானே தவிர செலவல்ல என்று வற்புறுத்தி வருவதை மனதில் கொள்ள வேண்டும்.

அரசுப்பள்ளிகளில் தரமான கல்வி தரப்படுவதில்லையே என்று பரவலாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அரசுப்பள்ளிகள் நம் பள்ளிகள் என்ற எண்ணம் மக்களிடையே இல்லாததே இதற்குக் காரணம். உப்பு, தீப்பெட்டி போன்று எதை இன்று வாங்கினாலும் நாம் வரி செலுத்துகின்றோம். அவ்வரிப்பணத்தில் தான் அரசுப்பள்ளிகள் இயங்குகின்றன. நமது பணத்தில் நடைபெறும் அப்பள்ளிகளின் செயல்பாட்டில் நாம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏழையானாலும் செல்வந்தர் ஆனாலும் அனைவரும் வரி செலுத்துபவர்களே. தரமான கல்வி அளிப்பதில் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானது. ஆசிரிய இயக்கங்கள் இப்பொறுப்பினை ஏற்று வகுப்பறைக் கற்பித்தல் சிறப்பாக நடைபெறும் வகையில் தம் உறுப்பினர்களுக்கு வழி காட்ட வேண்டும். அயல் நாடுகளில் ஆசிரியர் சங்கங்களில் தரமான கல்வி அளிக்க ஆசிரியருக்கு உதவிட துணை அமைப்புகள் இயங்குகின்றன. நாட்டின் எந்த மூலையினின்றும் ஆசிரியர் ஒருவர் தமது பாடத்தில் விளக்கம் கேட்டாரென்றால் உடனே அவருக்கு உரிய பதில் கொடுக்கப்படும். வகுப்பறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கொடுக்கப்படும். அவ்வண்ணம் நமது ஆசிரியர் சங்கங்களும் Quest (Quality in Educational Standards) போன்ற அமைப்புகளை உருவாக்கி ஒவ்வோர் உறுப்பினரும் தம் தொழிலில் சிறந்து விளங்க உதவ வேண்டும். இவ்வண்ணம் கட்டணமில்லாப்பொதுப்பள்ளி, அருகாமைப் பள்ளி, அரசுப்பள்ளிகளின் தர உயர்வு போன்ற செயல்பாடுகளே இன்று உள்ள வணிகமுறைக் கல்விக்கு மாற்று ஆகும். இவற்றை மெய்ப்பிக்க மக்கள் எழுச்சியும் அரசியல் உறுதியும் மிகப் பெரும் அளவில் வேண்டும். போகுமிடம் தொலைவாகத் தெரிந்தாலும் முயற்சி திருவினையாக்கும் அல்லவா ? பயணத்தை இன்றே தொடங்குவோம்.

**– தினமணி, 23.2.2009**

## தனியார் பள்ளிகளின் கல்வி கட்டண கொள்ளை

தனியார் பள்ளிக்கட்டணம் குறித்து அரசு தலையிட உரிமை இல்லாத போதிலும், லோக் சபா தேர்தலுக்குப் பின் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பது பற்றி முடிவெடுக்கப்படுமென தமிழக அரசு தெரிவித்துள்ளது. தனியார் பள்ளிகளில் கல்விக் கட்டணம் அரசின் அனுமதி பெறாமலேயே உயர்த்தப்பட்டுள்ளது குறித்தும், அதனால் பெற்றோர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும், 'தினமலர்' நாளிதழில் செய்தி வெளியாகி இருந்தது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தனியார் பள்ளிகள் தங்கள் கல்விக் கட்டணத்தை உயர்த்திக் கொள்ள அனுமதி கொடுத்து அரசின் சார்பில் எவ்வித ஆணையும் பிறப்பிக்கவில்லை. அ.தி.மு.க., ஆட்சியிலும் இதே பிரச்சினை இருந்து வந்தது. இப்பிரச்சினை குறித்து சிட்டிபாபு கமிட்டி அமைக்கப்பட்டு, கட்டணம் குறித்து பரிந்துரை பெறப்பட்டது. ஆனால், அதை அமல்ப்படுத்தும் முன்பே, சுப்ரீம் கோர்ட்டில் தனியார் பள்ளிகள் அதிக கட்டணம் பெறுவது பற்றிய வழக்கு வந்தது.

அதில், சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பில், தனியார் பள்ளிகள் வசூலிக்கும் கட்டணம் குறித்தோ, ஆசிரியர்களுக்கு தரப்படும் ஊதியம் குறித்தோ நிர்ணயித்துக் கொள்ள அந்தத்தனியார் பள்ளிகளுக்குத் தான் உரிமை உண்டு என்று கூறியது. இதனால், அரசால் எவ்வித குறுக்கீடும் செய்ய முடியவில்லை. இதன் காரணமாகத் தான் கடந்த ஆட்சியிலும், இந்த ஆட்சியிலும் தனியார் பள்ளிகள் அதிக கட்டணம் வசூலிப்பது குறித்து அரசின் சார்பில் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை உள்ளது.

தனியார் பள்ளிக் கட்டணம் குறித்து அரசு தலையிட உரிமை இல்லாத போதிலும், மாணவர்கள் சேரும் நேரத்தில் பெறும் நன்கொடை மற்றும் இதர கட்டணங்கள் சம்பந்தமாக, தி.மு.க. அரசு, அதிகாரிகள் கொண்ட குழுக்களை மாவட்ட வாரியாக நியமித்து, 2007 செப்டம்பரில் அரசாணை வெளியிட்டது. அக்குழுக்களின் மூலம் அதிக நன்கொடை வசூலிக்கும் தனியார் பள்ளிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்துள்ளதால், அதிகத் தொகை பெறுவது தற்போது பெருமளவு தடுக்கப்பட்டுள்ளது.

எனினும், லோக்சபா தேர்தலுக்குப் பின் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு முடிவெடுக்கும். இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

**– தினமலர், 2009**

# பாராளுமன்றத் தேர்தல் – மே 2009
# - CACL தேர்தல் அறிக்கை

**குழந்தை உழைப்பு எதிர்ப்புப் பிரச்சாரம் (CACL – தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி)**

**குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு மற்றும் கல்விக்கான உரிமையை அமலாக்குதல் குறித்து அரசியல் கட்சிகளிடம் சமர்ப்பித்த அறிக்கை**

## 1. அறிமுகம்

- தேசத்தின் வளர்ச்சிக்கு குழந்தை உரிமைகளை ஒரு முக்கிய அளவுகோலாக்க வேண்டும். குழந்தைகளின் நிலை மற்றும் அவர்கள் தங்களின் உரிமைகளை அனுபவிக்கின்றனரா என்பவைகளைக் கணக்கிட்டு அதன் அடிப்படையில் தேசத்தின் வளர்ச்சியை கணக்கிடவேண்டும்.
- அனைத்து சட்ட, நிர்வாக, நீதித்துறை முடிவுகள், கொள்கைகள், நிதிநிலை அறிக்கைகள் ஆகியவை குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அவை குழந்தைகள் நலன் அடிப்படையில் இருக்க வேண்டும்.
- 18 வயது வரை உள்ள அனைவரும் குழந்தைகள் என்று அங்கீகரிக்க வேண்டும். ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையின் தொடர்ச்சியாக குழந்தைகள் பாதுகாப்பு, வளர்ச்சி, உயிர் மற்றும் வாழ்வாதாரம், உயிர்வாழ்தல் மற்றும் பங்கேற்பு உரிமைகளை வழங்குவதற்காக அரசியல் அமைப்புச்சட்டத்திலும் பிற சட்டத்திலும் மாற்றங்கள் கொண்டுவர பாடுபடவேண்டும்.
- குழந்தைகள் கருத்துக்களை வெளிப்படுத்த, சங்கம் அமைக்க, தகவல் பெற, அவர்கள் வாழ்வை பாதிக்கும் கொள்கை முடிவுகளில் பங்கெடுக்க குழந்தைகளுக்கு உள்ள உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். குழந்தைகள் பங்கேற்பை மதித்து உற்சாகப்படுத்த வேண்டும்.
- 1992ல் இந்தியா கையெழுத்திட்ட ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையில் உள்ளவற்றை நிறைவேற்றவும் அரசியல் சாசனப் பாதுகாப்பை தேசிய அளவில் உறுதிப்படுத்தவும் ஒரு புதிய தேசியக் கொள்கை குழந்தைகளுக்காக உருவாக்கப்பட வேண்டும்.
- 18 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச, கட்டாய, தரமான, சமமான கல்வியை உத்திரவாதப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.
- 18 வயது வரையுள்ள அனைத்து வகையான குழந்தைத் தொழிலாளர்கள் முறையும் தடைசெய்யப்படவேண்டும். நிலச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- குழந்தைகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளும், தடைசெய்யப்படவேண்டும். குழந்தைகள் கடத்தப்படுவது தடை செய்யப்படவேண்டும்
- வாழ்வதற்கான குறைந்தபட்சக் கூலியோடு வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும். வறுமை ஒழிப்புத் திட்டங்களில் பணவீக்கத்தின் பாதிப்புக்கள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும். அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கு அவர்களின் உடல் நலன் பராமரிப்பு, விபத்துக்கான காப்பீடு, பேறுகால சலுகைகள், ஓய்வூதியம் போன்றவற்றை அளிக்கும் சமூகப்பாதுகாப்புச் சட்டங்கள், குழந்தைகளின் நலனைச் சார்ந்தே இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழந்தைக்கும் சத்தான உணவை உறுதி செய்யும் வகையில் வீட்டில் உள்ளவர்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பு உத்திரவாதப்படுத்தப் படவேண்டும்.

## 2. 18 வயதுவரையுள்ள அனைத்து வகையான குழந்தைத் தொழிலாளர் முறையும் ஒழிக்கப்பட வேண்டும்:

- குழந்தைத் தொழிலாளர் முறை, இந்திய அரசியல் சாசனம், ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை, பல்வேறு சர்வதேச சட்டங்கள் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO) உடன்படிக்கைகள் ஆகியவற்றில் உறுதி செய்யப்பட்டுள்ள குழந்தை உரிமைகளை அப்பட்டமாக மீறுவதாகும். குழந்தைத் தொழிலாளர் முறை அதிகப்படியான பொருளாதாரச் சுரண்டலின் அடிப்படையில் உள்ளது. அது குழந்தைகளுக்குத் தரமான கல்வியை மறுக்கிறது. அவர்களின் குழந்தைப் பருவம் மற்றும் உடல் நலனை

அழிக்கிறது. அவர்கள் பாகுபடுத்தப்படுவதற்கும், பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுவதற்கும் காரணமாக உள்ளது. சமூகத்தில் சமத்துவமின்மையையும், அநீதியையும் நிலைநிறுத்த வசதியாக அளவுக்கு அதிகமான லாபத்தை அடைய, வசதிபடைத்த வர்க்கத்தினரும் சாதியினரும் வறுமையை சுரண்டுவதன் காரணமாகத்தான் குழந்தைகள் பணியில் அமர்த்தப்படுகிறார்களே தவிர வறுமையின் காரணமாக அல்ல.

- அனைத்து வகையான தொழில்கள் அல்லது நிறுவனங்களில் 18 வயது நிறைவடையாத குழந்தைகள் பணியில் இருப்பது தடைசெய்யப்பட்டிருக்கும் வகையில் குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986ல் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும்.

- குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் அட்டவணை A மற்றும் B யின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள தடை செய்யப்பட்ட உற்பத்தித் தொழில்களில், தமிழகத்தில் உள்ள 11 முதல் 14 வயதுவரையுள்ள குழந்தைகள் ஈடுபடுத்தப் படுகின்றனர். 15 முதல் 18 வயது வரையுள்ள குழந்தைத் தொழிலாளர்களையும் சேர்த்தோம் என்றால் அது தற்போதுள்ள புள்ளிவிவரத்தைவிட இரண்டு அல்லது 3 மடங்கு அதிகமாகும். குழந்தைகள் தொழிலில் ஈடுபடுத்தப்படுவது என்பது, தொழிற்சாலைகளிலும், வாழிடங்களிலும் தரகர்களால் குடும்பத்தாரின் உதவியுடனும் உதவியின்றியும் நடத்தப்படுகிறது. ஒழுங்குபடுத்தப்பட்ட பணியிடங்களில் கூட வயது வரம்பின்றி லட்சக்கணக்கான குழந்தைகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். சுருங்கக் கூறின் குழந்தைத் தொழிலாளர் தடைச்சட்டத்தையும், மற்றும் 1996ஆம் ஆண்டின் உச்சநீதிமன்ற தீர்ப்பையும் மீறி குழந்தைத் தொழிலாளர் முறை தமிழகத்தில் வளர்ந்துவருகிறது. குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி சம்மந்தப்பட்ட பொறுப்பிலுள்ள அதிகாரிகளும் முதலாளிகளும் குழந்தைத் தொழில் முறையை தடை மற்றும் ஒழுங்கு படுத்தாமல் தப்பித்து வருகின்றனர். பெரியோர்களை வேலைக்கு அமர்த்துவதைவிட குழந்தைகளை பணியில் அமர்த்துவது லாபகரமாக உள்ளது என அறிந்திருக்கின்றனர். குறைந்த கூலி, நீண்ட வேலை நேரம், தரமற்ற பணியிடம், பிறருடன் தொடர்புகளற்ற சூழல், சித்ரவதை, கொடூரமான சூழல், ஆகியவை குழந்தைத் தொழிலாளர் பணியிடத்தின் அம்சங்கள் ஆகும். இந்நிலையில் சட்டத்தில் குழந்தைப் பாதுகாப்பை உறுதி செய்து, தொழில்களிலிருந்து அவர்கள் தடைசெய்யப்பட்ட நிலையிலும், குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை, உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்புகள், பரிந்துரைகள் சர்வதேச மனித உரிமை சட்டங்கள் போன்றவை இருந்தும் குழந்தைத் தொழிலாளர் முறை தொடர்கிறது. பெரியவர்களைத் தான் பணியில் அமர்த்த வேண்டும் என்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் அரசு இதுவரை எடுக்கவில்லை. குழந்தைகளை வேலைக்கு அமர்த்தும் முதலாளிகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்காத வரையில் முதலாளிகள் தங்களின் லாபத்திற்காக குழந்தைகளை தொடர்ந்து வேலைக்கு அமர்த்தும் நிலை தொடரும்.

- 18 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளும் உற்பத்தி மற்றும் அனைத்து தொழில்களிலுருந்தும் தடை செய்யும் முறையை உத்திரவாதப்படுத்தும் வகையில் குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குப்படுத்தல்) சட்டம் 1986 –ல் கட்டுக்கோப்பான சட்டத்திருத்தம் கொண்டுவந்து அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

- குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கு தேவையான கட்டுக்கோப்பான சட்டமாற்றம் கீழ்கண்டவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

1. குறுந்தலைப்பு, பரப்பு மற்றும் தொடக்கம்
2. சொற்பொருள் விளக்கங்கள்
3. குழந்தைகளை பணியில் அமர்த்துவதற்குத் தடை
4. இலவச, கட்டாய, தரமான மற்றும் சமமான கல்விக்கான உரிமை
5. குழந்தைத் தொழிலாளர்களை கண்காணிக்கும் குழு
6. குழந்தைத் தொழிலாளர்களை தடைசெய்யும் அலுவலர்கள்
7. ஆய்வாளர்கள்
8. 18 வயது வரை உள்ள குழந்தைகள் வீடு மற்றும் குடும்பம் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவதை தடை செய்து நடைமுறைப்படுத்துவது.
9. வயது குறித்து முரண்பாடு
10. குழந்தைத் தொழிலாளர் முறை தடை குறித்து அனைவரும் காணும்படி அறிவிப்பை வெளிப்படுத்துதல்
11. அபராதங்கள்

12. குற்றங்கள் தொடர்பான நடைமுறைகள்
13. குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலத்திற்கான நிதி
14. விதிகள் இயற்றுவதற்கான அதிகாரம்
15. விதிகள் மற்றும் அறிவிப்புகளை நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் தாக்கல் செய்தல்.
16. சட்டத்தின் மற்றைய சில வகையங்கள் செல்லாததாகாது என்பது
17. இடையூறுகளை நீக்குவதற்கான அதிகாரம்
18. நீக்குதல் மற்றும் பாதுகாப்பு
19. 1948 சட்டத்தின் 11 வது பிரிவை திருத்துவது
20. 1951 சட்டத்தின் 69வது பிரிவை திருத்துவது
21. 1958 சட்டத்தின் 44வது பிரிவை திருத்துவது
22. 1961 சட்டத்தின் 27வது பிரிவை திருத்துவது

- அனைத்துவிதமான கொத்தடிமைத் தொழிலை ஒழிக்க உங்கள் கட்சி அறைகூவல் விடுக்க வேண்டும். 18 வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைத் தொழிலாளர்களும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் ஆவார்கள். குறைந்தபட்ச ஊதியத்தை விட குறைவாக ஊதியம் பெறுபவர்களும், ஊதியமே பெறாமல் வேலை செய்பவர்களும் கொத்தடிமைத் தொழிலாளர்களாகவே கருதப்படுவார்கள் என்று கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் 1976 கூறுகிறது. உச்சநீதிமன்றமும் பலமுறை இது தொடர்பாக ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. வேலை செய்யும் பல குழந்தைகள் வயதுவந்தவர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை விட குறைவாகவே ஊதியம் பெறுகின்றனர். மேலும், அவர்கள் ஒரு நாளைக்கு 12 முதல் 14 மணிநேரம் எந்தவித கூடுதல் ஊதியமும் இன்றி வேலை செய்ய வைக்கப்படுகிறார்கள். இந்த நிலையே அனைத்துக் குழந்தைத் தொழிலாளர்களும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் என்ற கூற்றிற்கு சான்றாக உள்ளது.

- சுமங்கலித்திட்டத்தின் மூலம் அதிகமான பெண் குழந்தைகள் இடம்பெயர்க்கப்பட்டு கொத்தடிமைகளாக தொழில்களில் உள்ளனர். இதனால் அவர்களின் உரிமைகள் பறிக்கப்படுகிறது. ஆதலால் இத்திட்டம் உடனடியாக தடை செய்யப்பட வேண்டும்.

- பல்வேறு தொழிலில் உள்ள இலட்சக்கணக்கான குழந்தைகள், பெற்றோர்கள் வாங்கிய கடனுக்காக, கொத்தடிமைத் தொழிலாளர்களாக உள்ளனர். இதில் பெரும்பான்மையானோர் அவர்கள் பெற்றுள்ள கடன்கள் மற்றும் வட்டிக்காகவும் அடிமைகளாக வேலை செய்கின்றனர். பெரும் எண்ணிக்கையிலான குழந்தைகள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள், பல்வேறு வகையான வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். வேலை செய்யும் குழந்தைகள் சுவாசக் கோளாறு, சத்துணவு இன்மை, வயிற்றுப்போக்கு, எலும்பு நோய் போன்ற பிரச்சனை உள்ளிட்டவைகளுக்கு ஆளாகின்றனர். இக்குழந்தைகளின் குழந்தைப் பருவம், அவர்கள் வளர்வதற்கான உரிமை வாய்ப்புகள் அளிக்கப்படாமல் அவர்கள் பெரியவர்களாவதற்கு முன்னரே மறுக்கப்படுகிறது. தொழில்ரீதியாக சுரண்டப்படுவது மற்றும் வன்முறைகளுக்கு ஆளாக்கப்படுவது மட்டுமின்றி அடிக்கடி பாலியல் வன்முறைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். பெண் குழந்தைகள் வீடுகளில் வெளியே தெரியாத தொழிலாளர்களாக்கப்படுகின்றனர். இவர்கள் மேலும் குடும்பத்தை நடத்துவது, சமையல் செய்தல், குடிநீர் சேகரிப்பு, எரிபொருள் சேகரிப்பு அவர்களைவிட குறைந்த வயதில் உள்ள குழந்தைகளைப் பராமரித்தல், கால்நடைகளைப் பேணுவது போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதுபோன்ற குடும்பங்களில் தாய் வெளி வேலைக்கு செல்கின்றார். இவற்றினால் பெண் குழந்தையின் வளர்ச்சிக்கான உரிமை, சுகாதார பராமரிப்பு, கல்வி, பொழுதுபோக்கு போன்ற உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

- அதிகபட்ச சதவீத குழந்தைத் தொழிலாளர்கள் தலித் சமூகத்தில் இருந்துதான் வருகின்றனர். இதன் அர்த்தம், பெரும்பாலான கொத்தடிமை குழந்தைத் தொழிலாளர்களும், இந்த சமூகத்தில் இருந்து தான் வரவழைக்கப்படுகிறார்கள். இதுபோன்ற நிலையில் மிக அதிகமான சதவீதத்தினர் நகர்புற மற்றும் கிராமப்புறத்தில் உள்ள அமைப்பு சாரா தொழிலாளர்கள் (விவசாயத் தொழிலாளர்கள்) தலித்தாக உள்ளதால் மேற்கூறிய நிலை உருவாகிறது அவர்கள் கொடுமையான வறுமையையும், சுரண்டலையும் மற்றும் பாகுபாட்டையும், சமூகத்தில், வேலைசெய்யும் இடத்தில் சந்திக்கின்றனர். தலித் குடும்பத்தில் அவர்களுக்கு கிடைக்கும் மிக குறைவான வருமானத்தினால் சிறு வயதிலேயே அவர்கள் தொழிலுக்கு தள்ளப்படுகின்றனர்.

இந்திய அரசியல் சாசனச் சட்டத்தின்படி குழந்தைத் தொழிலாளர் முறை சட்ட விரோதமானதாகும். குழந்தைத் தொழிலாளர் தடை மற்றும் ஒழுங்குபடுத்துதல் சட்டம் 1986 குழந்தைத் தொழிலை சட்டபூர்வமாக்குகிறது. ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமை மீதான உடன்படிக்கையின் சரத்து 32, ஆனது 18 வயது வரை அனைத்து குழந்தைகளும் பொருளாதார ரீதியில் சுரண்டப்படுவதை தடை செய்கிறது. CACL–தமிழ் நாட்டின் நிலைப்பாடானது இந்திய அரசமைப்புச் சட்டம், குழந்தைகள் தொழில்களிலோ, சுரங்கங்களிலோ, பிற அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதை தடை செய்கிறது. குழந்தைகள் தொழிலில் ஈடுபடுத்தப்படுவது அபாயகரமானது என்பதால் இவர்கள் எவ்வகை தொழிலிலும் ஈடுபடுத்தப்படுவதை தடைசெய்கிறது. மேலும் அடிப்படை உரிமைகளின் சரத்து 14,21,21A,19,23,24 ஆகியவற்றுடன் வழிகாட்டு நெறிமுறைகளின் சரத்து 38(2), 39(e) மற்றும் (f), 43,45,46,47 ஆகியவை குழந்தைகள் தொழிலில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் இவ்வயதினர் பள்ளியில்தான் இருக்க வேண்டும் என்பதையும் விளக்குகிறது. சரத்து 24–ஐ தவிர வேறு எந்த சரத்தும் வயதுவரம்பு 14 என குறிப்பிடவில்லை. மேலும் இந்தியா ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான அரசியல் உடன்படிக்கையை 1992ல் கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்டதாலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழும் 18 வயதுவரையுள்ள அனைத்துக் குழந்தைகளும், பொருளாதார ரீதியில் சுரண்டப்படாமல் கொத்தடிமை முறை ஒழிப்பு, சமத்துவம் சுதந்திரம், வாழ்வு, விடுதலை என்பது குழந்தைகளின் சட்டப்பூர்வ உரிமைகளாகும். இந்தியாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐ.நா.வின் குழந்தைகள் உரிமை மீதான உடன்படிக்கையின்படி இந்திய அரசு குழந்தைகளின் சிறந்த நலனுக்கான கொள்கை, சட்டம், நிதி ஒதுக்கீடு மற்ற பிற தேவையான எவ்வகையான முடிவுகளையும் எடுக்க கடமைபட்டிருக்கிறது.

### 3. 18 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்விக்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டும்.

- 12ம் வகுப்பு அல்லது 18 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளும் இலவச, தரமான, கட்டாய, சமச்சீர் கல்வி பெறுவதற்கான சட்டத்திற்கு உங்கள் கட்சி ஆதரவு தரவேண்டும். இச்சட்டம் உடனடியாக இயற்றப்படவேண்டும். 0–6 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இளஞ் சிறார் பராமரிப்பு மற்றும் வளர்ச்சி முறைக்கான பொதுவான சட்டத்தின் பரவலான கோரிக்கைக்கும் உங்கள் கட்சி ஆதரவு தரவேண்டும். அனைத்து மாணவ மாணவிகளுக்கும் தரமான மதிய உணவு வழங்கப்பட வேண்டும்.

- தற்போது நடைமுறையில் உள்ள இலவச புத்தகங்கள், நோட்டுக்கள், சீருடை போன்ற மற்ற பிற திட்டங்கள் அனைத்து மாநிலங்களிலும் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் பொதுவானதாக இருப்பதுடன், தொடர்ந்தும் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கு குழந்தை உரிமை குறித்த பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

- அனைத்துப் பள்ளிகளிலும் மாநில அரசின் கல்வி வாரியத்தின் கீழ் அருகாமைப் பள்ளிமுறை என்ற அடிப்படையில் பொதுப் பள்ளி அமைப்பு முறையை அறிமுகப்படுத்தும் வகையில் சமரசமற்ற சட்டம் தேவையாகும்.
- தமிழ்மொழி பயிற்று மொழியாக்கப்படவேண்டும்.

- அரசின் மொத்த நிதியிலிருந்து (GDP) 8% கல்விக்காக ஒதுக்கப்படவேண்டும். அதில் 60% கண்டிப்பாக பள்ளிக் கல்விக்கு பயன்படுத்தப்படவேண்டும். பள்ளிக் கல்விக்கான முழு நிதியையும் அரசே வழங்க வேண்டும்.

- பள்ளிகளில் அனைத்து விதமான நன்கொடைகளும் வசூலிக்கப்படுவது தடைசெய்யப்பட வேண்டும். பயிற்சி வகுப்பு, தண்டனைகள், சித்ரவதை (உடல் ரீதியான தண்டனைகள் உட்பட) மற்றும் அனைத்து விதமான இழிவுப்படுத்தும் நடை முறைகளும் தடைசெய்யப்படவேண்டும்.

- 30 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் என்ற விகிதத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அனைத்துப் பள்ளிகளிலும் 1 வகுப்பு/பிரிவிற்கு ஒரு ஆசிரியர் என்ற முறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

- ஆசிரியர் பயிற்சிகளின் தரம் புதிய முறையில் மேம்படுத்தப் படவேண்டும் அனைத்துப் பள்ளிகளிலும் அடிப்படை வசதிகள், பள்ளிக் கட்டுமானம் போன்றவை மேம்படுத்தப்படவேண்டும். அரசுப் பள்ளிகள் மூடப்படுவது நிறுத்தப்படவேண்டும் கடந்த 10 வருடங்களில் மூடப்பட்ட அனைத்து அரசுப் பள்ளிகளையும்

புதுக் கட்டிடத்தில் மீண்டும் திறக்க வேண்டும். தனியார் பள்ளிகளுக்கும், தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

## சமச்சீர் கல்வி முறையில் – சமரசம் செய்யக் கூடாதவை.

- பள்ளிக் குழந்தைகளில் – கணிசமானவர்கள் படிப்பை பாதியில் விட்டு விடுகிறார்கள். அதன் பிறகு, அவர்கள் – குழந்தைத் தொழிலாளர்களாக வேலை வாங்கப்படுகிறார்கள். இந்தப் போக்கு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். காரணம் இலவச – தரமான – சமத்துவமான கல்வியை அனைவருக்கும் சமமான தரத்தில் வழங்க வேண்டும் என்ற அடிப்படை உரிமைக்கே, இது எதிரானதாகும். வறுமையிலிருந்து விடுபடுவதற்கும், குழந்தை நிலையிலேயே வேலைக்கு செல்ல வேண்டிய நிலையிலிருந்து விடுபடுவதற்கும் – கல்வி, ஏழைகளுக்கு மிக அவசியமான ஊன்றுகோலாகும்.

- பல்வேறு கல்வி வாரியங்களை ஒழித்து, ஒரே கல்வி வாரியத்தை அரசு அமைக்க வேண்டும். அனைத்துப் பள்ளிகளையும், இந்த நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வந்து, குழந்தைகளின் தேவைக்கேற்ற கல்வியை வழங்க வேண்டும்.

- 12 ஆம் வகுப்பு வரை எல்லா குழந்தைகளுக்கும் கட்டாயமான இலவசக் கல்வியை (குழந்தைகளுக்கு எந்தச் செலவும் இல்லாமல்) ஏற்றத் தாழ்வுகளற்ற பொதுப் பள்ளி முறை மூலம் வழங்குவதும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்வதும் அரசின் அடிப்படையான கடமையாகும். அத்துடன், அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கிடையே சிறந்த நிர்வாகத் திறமை கொண்ட ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும்; அதன் வழியாக 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பராமரிப்பையும், அவர்களுக்கான கல்வியையும் அரசு வழங்க வேண்டும், இது அரசின் அடிப்படைக் கடமையாகும்.

- கல்வி – தனியார் வர்த்தகத்துக்கு திறந்துவிடப்பட மாட்டாது என்ற நிலையை – அரசு எவ்வளவு விரைந்து உருவாக்க முடியுமோ, அவ்வளவு விரைந்து உருவாக்க வேண்டும். லாபம் ஈட்டக்கூடிய வர்த்தக மையமாக எந்தப் பள்ளியும் செயல்படக் கூடாது. அடுத்த 3 ஆண்டுகளுக்குள் அரசுப் பள்ளிகள் மட்டுமே இயங்க முடியும் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். 12 ஆம் வகுப்பு வரை அனைத்து தனியார் பள்ளிகளும் தடைப்படுத்தப்பட்டுவிட்டன என்ற நிலை வர வேண்டும்.

- கற்பவர் தங்களுக்கு விருப்பமான பாடங்களைத் தேர்வு செய்து கொள்ளும் வகையில் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழியே பயிற்று மொழியாக வேண்டும்.

- ஆங்கிலம், தேவையான மொழி என்ற அடிப்படையில் அனைத்துப் பள்ளிகளிலும், மேலும் சிறந்த ஆற்றலோடு கற்பிக்க வேண்டும்.

- தற்போதுள்ள இடஒதுக்கீடு முறை அனைத்துப் பள்ளிகளிலும், கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.

- 18 வயதுக்குட்பட்ட அனைவருக்கும், பொதுப் பள்ளி அமைப்பு வழியாக சமச்சீர் கல்வியை வழங்குவதற்கான ஒருங்கமைந்த கல்விச் சட்டம் ஒன்றை அரசு இயற்ற வேண்டும்.

- உரிய கல்வித் தகுதியுடைய ஆசிரியர்களை முறையான ஊதியத்தோடு, போதுமான எண்ணிக்கையில் நியமிக்க வேண்டும்.
- ஆசிரியர்கள் கல்விப் பணிகளை செம்மையாக ஆற்றிடவும், மாணவர்களுக்கு பயன்படவும், அவர்களின் கற்றலுக்கு தூண்டிவிடும் கருவியாக கடமையாற்றவும் வேண்டுமானால், குறைந்தது ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியராவது நியமிக்கப்பட வேண்டும்.

- அரசியல் சட்டம் வலியுறுத்துவது போல பாடத்திட்டம், பள்ளி விதிமுறைகள், வகுப்பு நடைமுறைகள் போன்றவை கற்பவருக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய வகையிலும், குழந்தைகளின் நலன் கருதி அவர்களுக்கு எந்தவித தண்டனைகளையும் வழங்காத வகையிலும் இருக்க வேண்டும்.

- கல்வியானது, குழந்தைகளின் கேள்வித்திறன், கற்பனைத் திறன்களை ஊக்குவித்து, அவர்களை அதிகாரமிக்கவர்களாக மாற்றுவதற்கே ஆகும்.

- அரசு வகுத்துள்ள விதிமுறைகளுக்கேற்ப பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகள் அமைந்திருத்தல் வேண்டும்.

- ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், விடுதிகள் மற்றும் பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளிகள், விடுதிகளில்

தரமான பள்ளிக்கட்டிடம், அடிப்படை வசதிகள், கற்பிப்பதற்கான கருவிகள், ஆசிரியர் தரமாக பாடம் நடத்துவது, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் தண்டனைகள் தடைசெய்வது போன்றவற்றை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். விலைவாசி ஏற்றத்திற்கு தகுந்தார்ப்போல மாணவர்களுக்கான உதவித்தொகை திருத்தப்பட்டு வழங்கப்பட வேண்டும். மேலும் அத்தொகை கல்வியாண்டு தொடக்கத்திலேயே மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும்.

- மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்போடு குழந்தை பாதுகாப்புக் கொள்கை ஒன்றை உருவாக்கி ஒவ்வொரு பள்ளியும் பின்பற்ற வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படவேண்டும்.

- குழந்தைகள் பங்குபெறும் குழு அனைத்து பள்ளிகளிலும் அமைக்கப்பட வேண்டும்.

- அனைத்துப் பள்ளிகளிலும் புகார்ப் பெட்டி தேவை.

- அனைத்துப்பள்ளிகளிலும் மாற்றுத் திறனுடைய (ஊனமுற்ற) குழந்தைகள் அனைவருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படவேண்டும். அத்தகைய குழந்தைகளின் தேவைகளோடு தொடர்புபடுத்த ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி தேவைப்படுகிறது.

- தெருவோரக் குழந்தைகள் அனைவருக்கும் அவர்களின் வளர்ச்சிக்காக, விடுதியோடு கூடிய பள்ளிக் கல்வி வழங்கப்படவேண்டும்.

- வயது வந்தவர்களுக்கு அவர்களின் வாழும் இடத்தில் அல்லது அவர்கள் வீடுகளுக்கு அருகில் வாழ்க்கைக்கான குறைந்த பட்ச ஊதியத்தோடு வேலை அளிப்பது உறுதிசெய்யப்படவேண்டும். இதனால் நிலம், வேலை இல்லாதது, வறுமை, கடன்சுமை போன்றவற்றால் குடும்பங்கள் வேறு இடத்திற்கு மாறுவது தடுக்கப்படும். குழந்தைகள் அவர்கள் வாழும் சூழலில் இருந்தும், வீடுகள், பள்ளி, நண்பர்களை விட்டு வேறு இடத்திற்கு போவது தடுக்கப்படும்.

- இடம்மாறும் குழந்தைகளுக்கு, சத்தான மதிய உணவு, பால்வாடி வசதிகள், ஆரோக்கியம், கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்தான உணவுத் திட்டம் போன்றவற்றோடு, அவர்கள் புதிதாக குடியேறிய இடத்தில் உள்ள பள்ளியில் கல்வியைத் தொடர உரிமை அளிக்கப்படவேண்டும். ஒரு வருடத்தின் எந்த நேரத்திலும் இத்தகைய சலுகைகளோடு அந்தக் குழந்தைகள் பள்ளியில் அனுமதிக்கப்படவேண்டும். இளம் குழந்தைகளுக்கு காப்பக வசதி அளிக்கப்படவேண்டும். இடமாற்றம் எந்த வகையிலும் குழந்தைகள் பள்ளி இடைவிலகுதல் அல்லது ரேஷன் பொருட்கள், பெறுவதில் சிக்கல் ஏற்படுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவ வசதி மறுக்கப்படல் போன்றவற்றிற்கு காரணமாக இருக்கக் கூடாது.

- மக்கள் இடமாற்றம் குறித்து உள்ளாட்சி அரசாங்கத்திற்கு தகவல் அளிக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு அடையாள அட்டை வழங்கப்படவேண்டும். அந்த அட்டை, குழந்தைகள் கல்வி, ரேஷன் பொருட்கள் பெறுவது போன்றவற்றிற்கு அடையாளமாக இருக்க வேண்டும்.

- குழந்தைகளுக்கு தங்கள் பள்ளிகளில் தரமான கல்வி வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## 4. வயதுவந்தோர் அனைவருக்கும் வாழ்வாதார உரிமைகளை உறுதிசெய்க :-

- இனி வரும் நாட்களில் குறிப்பிட்ட வயது நிறைவடைந்தோர் மட்டுமே எந்தத் தொழிலிலும் பணியமர்த்தப்படவேண்டுமென்று நாங்கள் கோருகிறோம். குறைந்தபட்சக் கூலிச் சட்டம் அனைத்து துறைகளிலும் ஆண்டுதோறும் மறுவரையறை செய்யப்பட்டு கண்டிப்பாக அமலாக்கப்பட வேண்டும். பல தொழில்களுக்கான கூலி விகிதச் சீரமைப்பு நீண்ட காலமாகவே மேற்கொள்ளப்படவில்லை. இதனை மிக அவசரமாகச் செய்து முடிப்பதன்மூலம் குடும்ப வருவாய் பெருகவும், வறுமையைத் தவிர்க்கவும் இயலும். இந்திய அரசு அனைத்து தொழிலாளர்களுக்கும் குறிப்பாக அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்காக நாடு முழுவதும் ஒரே சீரான குறைந்தபட்ச வாழ்க்கைச் சம்பளம், மற்றும் சமூகப்பாதுகாப்புத் திட்டங்களை அறிவிக்க வேண்டும். வேலைவாய்ப்பற்ற ஊரகத் தொழிலாளர்களுக்காக, தற்போது வேலை உத்தரவாதச் சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் வேலை உறுதியளிப்புத் திட்டங்களை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தி, வேலை கோரும் அனைவருக்கும் இத்திட்டத்தின் கீழான பணிகளில், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். 18 வயது நிறைவடைந்த அனைவருக்கும் வேலைவாயப்புக்கான உரிமை என்பதை அரசியலமைப்புச் சட்ட அடிப்படை உரிமையாக்கிட வேண்டும்.

- பணி நிரந்தரம் (குறைந்தது அமைப்பு ரீதியான தொழில்களிலாவது) என்ற மிக முக்கியமான இந்தியத் தொழில்துறைக் கோட்பாட்டின் மீது தாக்குதல் நிகழ்த்தும் நடவடிக்கைகளுக்கு இந்திய, மாநில வர்த்தக மையங்கள் முக்கியத்துவமளிக்கும் போக்கு வளர்ந்து வருகிறது. தொழிலாளர்களது பணி நிரந்தர உரிமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, விருப்பம் போல வேலைக்கு அமர்த்துவதும், அதே போல நீக்குவதுமாக எல்லா தொழிலாளர்களையும் ஒப்பந்தக் கூலிகளாகவே வைத்திருக்கும் புதிய நடைமுறை தொழில் வணிகத்துறைகளில் புகுத்தப்பட்டு வருகிறது. இவற்றோடு, தொழிற்சங்கச் சட்டத்தையும், தொழிற்தகராறு சட்டத்தையும் தகர்த்தெறிய இந்திய அரசு முயற்சித்து வருகிறது. இத்தகைய நிலைப்பாடு மனித உரிமைகளை ஒட்டுமொத்தமாக உருக்குலைப்பதாகும். இதனால் வறுமைபெருகி கோடிக்கணக்கான தொழிலாளர்கள் தமது குழந்தைகளை வேலைக்கு அனுப்பியாக வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்படுகிறது.

- சந்தை முழுவதும் உலகமயமாக்கப்படும் சூழல் காரணமாக அமைப்புச் சாராத் தொழிலாளர்களின் வாழ்நிலை நாள்தோறும் நலிவடைந்து வருகிறது. விவசாயக் கூலித் தொழிலாளர்கள் உள்ளிட்ட 85% சதவீத உழைப்புச் சக்தியைப் பிரதி நிதித்துவப் படுத்துவோருக்கான பாதுகாப்புச் சட்டங்கள் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் கோரி பல தலைமுறைகளாகப் போராட்டம் நடந்த பின்னரும் கூட அவற்றை நிறைவு செய்ய மத்திய, மாநில அரசுகள் இதுவரை ஏதும் செய்யவில்லை.

- அனைத்து அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கும் நிரந்தர வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவர்களுக்கான வேலையை முறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டப்பாதுகாப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். பல அமைப்பு சாரா தொழில் பிரிவுகள் பாதுகாப்பான சட்டம் அல்லது நலவாரியங்களின் கீழ் வருவதில்லை. நாடு விடுதலையடைந்து 61 ஆண்டுகள் சென்ற பிறகும் நாட்டில் உள்ள 85% தொழிலுக்கு பிரச்சனைக்கான தீர்வு நடைமுறைகளோடு முதலாளி, தொழிலாளி உறவு முறை நிரந்தர வேலைக்கான உறுதி, வேலைச் சூழலுக்கான தொழிலாளர் தர நிர்ணயங்கள், குறைந்த பட்ச கூலி வழங்கப்படுவதற்கான உத்திரவாதம் போன்றவற்றை உள்ளடக்கிய எந்த சட்ட வரையறையும் கிடையாது.

- அனைத்து வகையான தொழில்களும் மிகத்தீவிரமாக, மிக விரிவாகப் பரிசீலனை செய்யப்பட்டு பணியில் தேர்ச்சியற்ற, குறைந்த அளவே தேர்ச்சி பெற்ற, மிகச் சிறந்த தேர்ச்சி பெற்ற தொழில் வகைகளுக்கேற்ப குறைந்த பட்சக்கூலி வரையறை செய்யப்படவும், அமலாக்கப்படத் தக்க வகையில் ''பட்டியலிடப்பட்ட பணிகளுக்கேற்ப'' குறைந்தபட்சக் கூலிச் சட்டமானது திருத்தப்படவேண்டும்.

- அமைப்புச்சாராத் தொழில்களுக்குட்பட்ட, பல்வேறு துறைகளுக்கென குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இச்சட்டம் பணியாளர் – பணியமர்த்துவோர் உறவு, பணிநிலைமைகள், தேவைக்கேற்ற குறைந்தபட்சக் கூலி, தாவாக்களைத் தீர்த்துவைக்கும் அமைப்பு மற்றும் இதர பிரச்சினைகளோடு தொடர்புடைய பல்வேறு தொழிலாளர் உரிமைகளை விரிவாக உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

அமைப்புச்சாராத் தொழிலாளர்களின் அனைத்துப் பிரிவினருக்கும் ஆண்டு வெகுமதி பணிக்கொடை, ஓய்வூதியம், மருத்துவச் சலுகை, கடன் வசதி, விபத்து நிவாரணம் போன்றவற்றை உள்ளடக்கிய சமூகப் பாதுகாப்புத் திட்டம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

அனைத்துத் தொழிலாளர்களுக்கும் தேவைக்கேற்ற வாழ்வூதியம் (குறைந்த பட்சக் கூலி) உரிமையாக உறுதிப்படுத்தப்படவேண்டும். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இந்த ஊதியம் மாற்றப்படவேண்டும். அரசியல் சட்டத்தின் 11 வது பிரிவில் குறைந்த பட்ச கூலிச் சட்டம் தொடர்புடைய விதிகள் அறிவிக்கைகளோடு சேர்க்கப்படவேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வேலைக்கான உரிமை அடிப்படை உரிமையாக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த வேலை உறுதித் திட்டம் ஒன்றின் மூலம் அனைவருக்கும் வேலையை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

## கட்டட வசதி இல்லாததால் மரத்தடியில் கல்வி கற்கும் மாணவர்கள்.

செங்கல்பட்டு அடுத்த ஒழுலூர் கிராமத்தில் அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி மாணவர்கள் கட்டட வசதி இல்லாததால் மரத்தடியில் அமர்ந்து படிக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. செங்கல்பட்டு அடுத்த ஒழுலூர் கிராமத்தில் அரசு ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப் பள்ளி உள்ளது. 1978ம் ஆண்டு துவக்கப்பட்டது. இப்பள்ளியில் 184 மாணவர்கள் படித்து வருகின்றனர். தரை தளம் மற்றும் இரண்டு மாடிகள் கொண்ட பள்ளிக் கட்டடத்தின் மேற்கூரை கடந்த அக்டோபர் மாதம் மழையின் போது பெயர்ந்து விழுந்தது. வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போதே மேற்கூரை பெயர்ந்து விழுந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தகவல் அறிந்து வந்த கிராம மக்கள் மாணவர்களை நூலகக்கட்டடத்தில் தங்க வைத்தனர். அதிகாரிகள் வந்து ஆய்வு மேற்கொண்டனர். புதிய கட்டடம் கட்ட தாட்கோ மூலம் 35 லட்ச ரூபாய், அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் 11 லட்ச ரூபாய், எம்.எல்.ஏ தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

கட்டடம் கட்ட அதிகாரிகள் இடம் தேர்வு செய்யும் போது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விளையாட்டுத் திடலில் கட்டடம் கட்டலாம் என தெரிவித்தனர். அப்போது கிராம மக்கள் இது மாணவர்களுக்கான விளையாட்டுத் திடல். எனவே வேறு இடத்தை தேர்வு செய்யுங்கள் என்றனர். அதிகாரிகள் அங்கேயே கட்டடம் கட்டும்படி தெரிவித்துள்ளனர். பணியை துவக்க முடிவு செய்தபோது அந்த இடத்திற்கு ஒருவர் உரிமை கொண்டாடினார். இது குறித்து கிராம மக்கள் கலெக்டர், ஆர்.டி.ஓ., தனி தாசில்தாரிடம் முறையிட்டனர். அதிகாரிகள் பணியை ஆரம்பியுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என தெரிவித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து கடந்த நவம்பர் 5ம் தேதி கிராம மக்கள் பூஜை போட்டனர். அதற்கு இடத்திற்கு உரிமை கொண்டாடியவர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், உரிய காலத்தில் கட்டடம் கட்டப்படாததால் ஒதுக்கப்பட்ட நிதியை திரும்பப் பெறும் நிலை ஏற்பட்டது. கிராம மக்கள் கடந்த 9ம் தேதி காஞ்சிபுரத்தில் மாவட்ட அதிகாரிகளை சந்தித்து கட்டடம் கட்ட ஏழு நாட்களுக்குள் அனுமதி வழங்கும்படி கோரினர். இல்லையெனில் பள்ளிக் குழந்தைகளோடு, சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவித்தனர். அதன் பின்னரும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. பொது மக்கள் அடுத்த கட்ட போராட்டம் குறித்து அலோசனை நடத்தி வருகின்றனர்.

### அதிகாரிகள் தடுமாற்றம்

அதிகாரிகள் உறுதியான முடிவு எடுக்காத நிலையில் ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள், தற்போது கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நெருக்கடியான இடத்தில் படித்து வருகின்றனர். இதனால், தொடக்கப்பள்ளி மாணவர்களும் இரண்டு அறைகளிலேயே படிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நடுநிலை வகுப்பு மாணவர்கள் கிராமத்தில் உள்ள மகளிர் சுய உதவிக்குழு கட்டடத்திலும், நூலக கட்டடத்திலும், மரத்தடியிலும் படித்துவருகின்றனர். கோடைக்காலம் துவங்கியுள்ள நிலையில், மாணவர்கள் கடும் வெயிலில் அமர்ந்து படிக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. அதிகாரிகள் உடனடியாக கட்டடம் கட்டும் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும்.

**–தினமலர், 20.2.09**

# தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR) மாநில தலைமைச் செயலாளர்களுக்கு எழுதிய கடிதம்

No.NCPCR/Edu.1/07/39

9.8.2007

அன்புள்ள தலைமைச் செயலாளருக்கு,

பொருள்: பள்ளிகளில் உடல் ரீதியான தண்டனையளித்தல் குறித்து

இந்தாண்டு பள்ளிகள் துவங்கியது முதலாகவே, பள்ளிகளில் மாணவர்களுக்கு கொடூரமான தண்டனைகள் வழங்கப்படுவது குறித்த செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக ராஜஸ்தானில் பள்ளி மாணவன் ஒருவனை ஆசிரியர் அடித்ததில் இரண்டு நாட்கள் கழித்து அவன் மரணமடைந்துவிட்டான். ஆந்திராவில் பள்ளி ஆசிரியர் ஒருவர் தனது மாணவர்களுக்கு மின்சார அதிர்ச்சி அளித்திருக்கிறார். அந்தப்பள்ளியின் தலைமையாசிரியர் அதனை ஆதரித்ததோடு மட்டுமின்றி நியாயப்படுத்தவும் செய்திருக்கிறார். இவையாவும் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற தனித்தனிச் சம்பவங்களாகத் தெரியவில்லை. இவை வன்முறை சார்ந்த கலாச்சாரத்திற்கான கொள்கை அமலாக்கமன்றி, குழந்தைகள் என்ற உணர்வோ அல்லது அவர்களது உரிமைகள் குறித்த உணர்வோ இல்லாமையைத் தான் சுட்டுகிறது.

குழந்தைகள் அச்சம் காரணமாக பெரும்பாலும் மௌனமாக இருப்பதோடு, எந்தக் கேள்வியுமின்றி தம்மை வன்முறைக்கு ஒப்புக்கொடுத்து விடுகின்றனர். அவர்கள் தாங்கள் மிக பலமான பாதிப்புக்குள்ளாக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத் தமது நடவடிக்கைகள் மூலம் வெளிப் படுத்துகின்றனர். ஆனால் அவை பெரும்பாலும் கவனிக்கப்படாததோடு, அவர்கள் மீதான வன்முறைப்பிரயோகம் தொடர்ந்து கொண்டு தானிருக்கிறது.

விரல் மூட்டுகளில் அடிப்பது, பள்ளி மைதானத்தைச் சுற்றி ஓடச் சொல்வது, மணிக்கணக்கில் முழங்காளிடச் சொல்வது, நிற்கச் சொல்வது, நாற்காலி போல உட்காரச் சொல்வது, அடிக்கோலால் அடிப்பது, கிள்ளுதல் மற்றும் அறைதல், பாலியல் ரீதியாக துன்புறுத்துவது, சித்திரவதை செய்வது, வகுப்பறைக்குள் மாணவர்களைத் தனியே விட்டுப் பூட்டிவிடுவது, மின்சார அதிர்ச்சி உள்ளிட்ட எல்லா வகையான அவமானப்படுத்துதல், இழிவுப் படுத்துதல், உடல் ரீதியாக, உளவியல் ரீதியாக காய மேற்படுத்துவது, அல்லது மரணம் விளைவிப்பது ஆகிய யாவும் உடலியல் ரீதியான தண்டனைகளாகும்.

அரசுப் பள்ளிகளில் மட்டுமின்றி, தனியார் பள்ளிகளிலும் கூட உடல் ரீதியான தண்டனை வழங்கும் முறை மாணவர்களை ஒழுங்கு படுத்துகின்ற ஒரு சாதாரண நடவடிக்கையாகவே கருதப்படுகிறது. எல்லா வகையான பள்ளி தண்டனைகளுமே அடிப்படையில் மனித உரிமை மீறல்களேயாகும். ஒரு மாணவனுக்கு கொடுங்காயம் விளைவிப்பது மட்டுமல்லாது அவனது கன்னத்தில் அறைவது கூட அவனது உரிமைக்குக் கேடு விளைவிப்பதாகும். இதில் சிறியது பெரியது என்று பட்டியலியிட்டு, இது போன்ற செயல்களை 'மிகச்சிறிய செயல்' என்று மன்னித்துக் கைவிட்டு விடுவோமானால், அவையே பின்னாளில் பெருந்தீங்கு விளைவிக்கிற வன்செயல்களுக்கு வித்திட்டு விடும். இதனை சட்டரீதியாக அனுமதிக்க முடியாது. உச்சநீதிமன்றம் **2000**ஆம் ஆண்டு டிசம்பர் **1**அன்று பள்ளிகளில் தண்டனையைத் தடைசெய்ததோடு, எல்லா மாநில அரசுகளும் "பள்ளிகளில் மாணவர்கள் தண்டனைகளுக்கு உட்படுத்தாதிருப்பதையும், அவர்கள் சுதந்திரமும், பெருமித உணர்வோடும், அச்சமில்லாத சூழ்நிலையில் கல்வி பெறுவதையும்" உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று உத்தர விட்டுள்ளது.

பெரியவர்களைப் போலவே குழந்தைகளும் மனித உரிமைகளும், உணர்வுகளும் உள்ளவர்களே, அவர்கள் மிகுந்த அக்கறையோடு பாதுகாக்கப்பட வேண்டும். குழந்தைகளைக் குழந்தைகளாகப் பார்ப்பதன் மூலமே வன்முறையில்லாத சூழல் உருவாகும். குழந்தைகள் எந்த வகையிலும் வன்முறைக்கோ அல்லது தாக்குதலுக்கோ

உட்படுத்தப்பட மாட்டார்கள் என்ற நம்பிக்கையை குழந்தைகள் மத்தியில் ஏற்படுத்த வேண்டியது பெரியவர்களின் கடமையாகும். இந்த முறையைப் பேணிவளர்ப்பதன் மூலம் பெரியவர்கள் விழிப்புணர்வு உள்ளவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் மாறி, குழந்தைகளை மதிக்கின்ற நடைமுறைகளை மீறுவோரை கேள்வி கேட்கும் நிலை உருவாகும்.

இத்தகைய சூழ்நிலையில், தண்டனைகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆசிரியர்கள், நிர்வாகத்தின் பல அடுக்குகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் பள்ளி நிர்வாகத்தோடு எல்லா வகைகளிலும் தொடர்புள்ள எல்லோரையுமே சார்ந்ததாகும்.

தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் எல்லா மாநிலங்களைச் சேர்ந்த கல்வித் துறையினரும் கீழ்கண்டவற்றை உறுதி செய்யக்கோருகிறது.

1. பிரச்சாரம் மற்றும் உரிய விளம்பர ஏற்பாடுகள் மூலம் பள்ளிகளில் தண்டனைகள் குறித்து குழந்தைகள் யாவரும் விமர்சனம் செய்யவும், அதிகார மட்டத்தில் புகார் செய்யவும் உரிமை உடையவர்கள் என்பதை அறியச் செய்தல் வேண்டும். தங்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் ஒரு வழக்கமான நடைமுறை என ஏற்றுக்கொள்வதை விடுத்து, அது குறித்து புகார் செய்யும் வகையில் குழந்தைகளிடையே நம்பிக்கை உருவாக்கப்பட வேண்டும்.

2. பள்ளிகள், மாணவர் விடுதிகள், கூர்நோக்கு இல்லங்கள், அனாதை விடுதிகள் தவிர குழந்தைகள் தொடர்பான எல்லாப் பொது நிறுவனங்களிலும் குழந்தைகள் தங்களது கருத்துக்களை எடுத்துரைக்கும் வகையிலான அமைப்புகள் இருத்தல் வேண்டும். இந்த வாய்ப்பை வழங்கிட இத்தகைய பொது நிறுவனங்கள் ஏதாவது தன்னார்வ அமைப்பு ஒன்றின் உதவியைக் கோரிப் பெறலாம்.

3. ஒவ்வொரு பள்ளியிலும் குழந்தைகள் தங்கள் புகார்களை எழுதிப்போட (அவை அனாமதேயமாக இருப்பினும் கூட) ஒரு புகார் பெட்டி வைக்கப்பட வேண்டும்.

4. இத்தகைய புகார்களைப் பரிசீலிக்கவும், அவற்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் பள்ளிநிர்வாகக்குழு அல்லது கிராம கல்விக்குழு ஆகியவற்றின் மாதாந்திரக் கூட்டம் தவறாது நடத்தப்பட வேண்டும்.

5. குழந்தைகள் சமர்ப்பித்த புகார் மீது பிரச்சினைகளை தள்ளிப்போடாமல் அல்லது பிரச்சினை தீவிரம் அடைய வாய்ப்பளிக்காத வகையில் உடனடி நடவடிக்கை எடுக்க பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஊக்கப்படுத்தப்படுதல் வேண்டும். வேறு வகையில் சொல்வதானால் அளிக்கப்பட்ட புகாரின் தீவிரத்தை உணர்ந்து பகுத்தறிவோடு சிந்தித்துச் செயல்படுதல் வேண்டும்.

6. தண்டனை அளிக்கப்படுவது பற்றி புகார் அளித்தால் எதிர்மறை விளைவுகள் ஏற்படும் என்ற அச்சவுணர்வு இன்றி, தண்டனை குறித்து வெளிப்படையாக விமர்சனம் செய்திட பெற்றோருக்கு அதேபோல குழந்தைகளுக்கும் அதிகாரமளிக்கப்பட வேண்டும்.

7. குழந்தைகளின் புகார்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசீலனை, அவற்றின் மீது எடுக்கப்பட்ட முடிவுகள் ஆகியவற்றைக் கண்காணிக்க மாநில, மாவட்ட ஒன்றிய அளவிலான நடைமுறைக் கோட்பாடுகள் கல்வித்துறையால் வகுக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட வழிகாட்டு நெறி முறைகள் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து எல்லா மாநிலங்களும் இரண்டு மாதங்களுக்குள் தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு தகவல் அளிக்க வேண்டும்.

ஆழ்ந்த அன்புடன்
தங்கள் உண்மையுள்ள
(ஒப்பம்) XXXX
(சாந்தா சின்ஹா)

பெறுதல்:
அனைத்து மாநில / யூனியன் பிரதேச
தலைமைச் செயலாளர்கள்

# கற்பிக்க கசடற....

–Dr. V. வசந்திவே

“ஒரெண்டு ரெண்டு, ஈரெண்டு நாலு, மூரெண்டு ஆறு..” அரை டிரவுசருக்குள் ஒளித்துவைத்த நாவல் பழங்களும், கையில் கட்டிய ஜவ்வு மிட்டாய் வாட்ச்சுமாக வலம் வந்த அரசுப் பள்ளியின் வாசனையை யாரால் மறக்க முடியும்? தனியார் பள்ளிக்கூடங்கள் பெருகிப் பரவிவிட்ட நிலையில், எப்படி இருக்கின்றன நம் கிராமத்துப் பள்ளிக்கூடங்கள்?

“நம்ப மாட்டீர்கள்... பீகார், ஜார்கண்ட் மாநிலங்களைவிட ஆரம்பக் கல்வியின் நிலை தமிழகத்தில் மிக மோசம். 1,2,3 என எண்களை எண்ணக்கூடத் தெரியாத 2–ம் வகுப்பு மாணவர்கள் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகம். இந்தியா முழுக்க 7 லட்சம் குழந்தைகளிடம் நடத்தப்பட்ட சர்வேயின் முடிவுகள் அதிர்ச்சி அளிக்கின்றன. 'ஒளிரும் இந்தியா', 'வளரும் தமிழகம்' என்ற வெளிப்பூச்சுக்குப் பின் மறைந்திருக்கும் உண்மை இதுதான். வசதி படைத்த குழந்தைக்குத் தரமான கல்வி, ஏழைக் குழந்தைக்குத் தரமற்ற கல்வி என்று கல்வியையும் ஒரு வணிகப் பண்டமாக்கிவிட்ட நாட்டில், வேறென்ன எதிர்பார்க்க முடியும்?”. – காட்டமாகக் கேட்கிறார் வசந்திதேவி. தமிழ்நாடு பெண்கள் ஆணையத்தின் முன்னாள் தலைவி. 'கல்வி' என்னும் அமைப்பைச் சேர்ந்த முனைவர்.

இந்திய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக மும்பையிலிருந்து செயல்படும் 'பிரதம்' என்ற அமைப்பு ஆண்டுதோறும் இந்தியக் கல்விச் சூழல் குறித்து நாடு தழுவிய ஆய்வுகளை மேற்கொள்கிறது. இந்த ஆண்டு இந்தியக் கிராமப்புற ஆரம்பக் கல்வி குறித்து இந்தியா முழுவதும் 564 மாவட்டங்களில் 16,198 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 7 லட்சம் குழந்தைகளிடம் மிக விரிவான ஆய்வு நடத்தப்பட்டது. தமிழகத்தில் 870 கிராமங்களைச் சேர்ந்த 31 ஆயிரம் குழந்தைகளிடம் ஆய்வு நடத்தப்பட்டது. இதன் தமிழகப் பொறுப்பாளராக இருந்து செயல்பட்டவர் வசந்திதேவி. “தேசிய அளவில் மிக அதிகமான மாணவர்களிடம் நடத்தப்பட்ட மிகப் பெரிய சர்வே இது. நேரடியாக வீடுகளுக்கே சென்று மாணவர்களைச் சந்தித்தோம். 5–ம் வகுப்பு மாணவனிடம் 2–ம் வகுப்பு பாடப் புத்தகத்தைப் படிக்கச் சொன்னோம். 63–25=? என்ற எளிய கழித்தல் கணக்கு 3,4,5–ம் வகுப்பு மாணவர்களிடம் கேட்கப்பட்டது. 1 முதல் 9 வரையிலான எண்களை அடையாளம் காண முடிகிறதா என 1,2–ம் வகுப்பு மாணவர்களிடம் கேட்டோம். ஒட்டுமொத்த முடிவுகள் நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. இரண்டு வருடங்கள் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவனுக்கு 'ஒன்று, இரண்டு' சொல்லத் தெரியவில்லை. ஐந்து வருடங்களாகப் பள்ளிக்குப் போகிற பிள்ளைக்கு எளிய கழித்தல் கணக்குகள் வரவில்லை. 8–ம் வகுப்பு படிக்கும் மாணவனால் 5–ம் வகுப்புத் தமிழ் புத்தகத்திலிருந்து ஒரு பாரா படிக்க முடியவில்லை. இது தான் தமிழகக் கிராமத்துப் பள்ளிகளின் உண்மை நிலை. தமிழ்நாட்டில் 3 முதல் 5 வரையிலான வகுப்பு படிக்கும் மாணவர்களில், ஒன்றாம் வகுப்புப் புத்தகத்தைக் கூட வாசிக்கத் தெரியாதவர்கள் 54.3 சதவிகிதம். இதன் தேசியச் சதவிகிதம் 33.4, கர்நாடகா, உத்தரப்பிரதேசம், அஸ்ஸாம் போன்ற மாநிலங்கள் பின்தங்குவதில் நம்முடன் போட்டியிடுகின்றன. ஆனால், பொதுவாக மக்கள் மனதில் 'பின்தங்கிய' மாநிலங்களாகப் பதிந்திருக்கும் பீகார், மத்தியப்பிரதேசம், சட்டீஸ்கர் போன்றவை ஆரம்பக் கல்வியில் முன்னேற்றம் கண்டிருக்கின்றன. அதே நேரம், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையில் தேசிய அளவில் தமிழகத்துக்கு இரண்டாம் இடம் கிடைத்திருப்பது மிகச் சன்னமான ஆறுதல்!

உளவியல்ரீதியாக ஒரு குழந்தையை உருவாக்குவதில் ஆரம்பக் கல்விக்கு மிக முக்கியப் பங்கு உண்டு. ஆனால், தமிழ்நாட்டில் எல்லாக்குழந்தைகளுக்கும் சமமான கல்வி கிடைப்பதில்லை. முதல் தலைமுறை கல்வி பெற்று வேலைக்குப் போகும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் பிள்ளை மெட்ரிக் பள்ளியில் படிப்பதை ஸ்டேட்டஸ் சிம்பலாக நினைக்கின்றனர். அரசு மருத்துவமனையில் பிரசவம் பார்த்தால், அது உறவினர்களால் கேலி செய்யப்படுமோ என்று நினைத்து தனியார். மருத்துவமனைக்குச் செல்லும் நடுத்தர வர்க்கத்தினர், அதே மனநிலையுடன்தான் தங்கள் பிள்ளைகளைத் தனியார் பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். 'மக்குப்பிள்ளைதான் டியூஷனுக்குப் போகும்' என்ற பழைய நிலை மாறி, இன்று இரண்டாம் வகுப்பு குழந்தைகூட டியூஷனுக்கு அனுப்பப்படுகிறது. முழுக்க முழுக்கக் கல்வி என்பது வணிகமயமாகிவிட்டது.

இத்தனை பாகுபாடுள்ள கல்வி முறை உலகில் வேறு எந்த நாட்டிலும் கிடையாது. ஐரோப்பிய நாடுகளில் தனியார் பள்ளி என்ற அமைப்பே இல்லை. உலகின் முன்னேறிய நாடுகளில் பள்ளிக் கல்வி எப்போதும்

அரசின் பொறுப்புதான். எல்லோரும் வீட்டின் அருகில் இருக்கும் பள்ளியில் தான் தங்கள் குழந்தையைச் சேர்க்க வேண்டும். இங்குதான் 15கி.மீ, தூரமுள்ள பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்த்து, பிஞ்சுகளை வாட்டி வதைக்கிறார்கள். இது குழந்தைப் பருவத்தையே சிதைக்கிற கல்விமுறை.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவிகிதத்தை ராணுவத்துக்கு ஒதுக்கும் அரசு 2 முதல் 4 சதவிகிதம் மட்டுமே கல்விக்கு ஒதுக்குகிறது. பள்ளியில் பாடச் சுமை மிக அதிகமாக இருப்பதும் நம் நாட்டில் தான். அமெரிக்காவில் 10–ம் வகுப்பில் நடத்தப்படும் பாடங்கள், இங்கு 7–ம், 8–ம் வகுப்புகளிலேயே நடத்தப்படுகின்றன. 8–ம் வகுப்பு பாடப் பகுதிகளை 7–ம் வகுப்புக்கு மாற்றி வைப்பது தான் நம் ஊரில் 'சிலபஸ் ரிவிஷன்'. இன்றைய குழந்தை தன் தகுதிக்கு மீறிய சுமைகளைச் சுமக்கிறது.

'தாய்மொழி வழிக் கல்விதான் சிறந்தது' என்பது உலகில் எந்தவித ஆட்சேபனையும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவு. ஆனால், தமிழகத்தின் நிலை ? கடந்த இரண்டு தலைமுறைகளாக வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமிழை ஒரு மொழிப் பாடமாகக்கூடப் படிக்கவில்லை. அவர்களின் இன்றைய வாரிசுகள் தமிழ் படிப்பதை அவமானமாகக் கருதுகின்றனர். இப்படி அரசுப் பள்ளியில் படிக்காத, அதன் தேவை குறித்து அறியாத இந்த மேல்தட்டு வர்க்கத்தினர் சகல வசதிகளுடனும் படித்து, அரசின் கொள்கை முடிவுகளை நிர்ணயிக்கும் இடத்தை வந்தடைந்து விடுகின்றனர். பொதுப் பள்ளியின் பயனாளிகள் இல்லாத இவர்களுக்கு அரசுப் பள்ளியின் வளர்ச்சி குறித்து எந்த அக்கறையும் இருப்பதில்லை.

இன்றளவும் 80 சதவிகிதக் குழந்தைகள் கிராமங்களில் தான் இருக்கிறார்கள். ஆனால், இந்தக் கல்வி அமைப்பு அவர்களுக்கு எதிராகவே இருக்கிறது. பெரும்பான்மையினரை வெளியேற்றும் இந்தக் கருணையற்ற கல்வி முறை ஒழிக்கப்பட வேண்டும். அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரே விதமான கல்வி வழங்கும் சமச்சீர் கல்விமுறை கொண்டுவரப்பட வேண்டும். அருகில் உள்ள பள்ளியில் தான் சேர்க்க வேண்டும், பள்ளிக் கல்வி முழுவதும் அரசுப் பொறுப்பில் இலவசமாக வழங்கப்பட வேண்டும். இது நடைமுறைக்குச் சாத்திய மில்லாத நிலை கிடையாது. பெரும்பாலான நாடுகளில் அமலில் உள்ள முறைதான். அதை அப்படியே இங்கு நடைமுறைப்படுத்தினால் போதும்''! –அக்கறையுடன் பேசுகிறார் வசந்திதேவி.

**ஆனந்த விகடன், 2009**

## தமிழகம் முழுவதும் குழந்தைகளை கடத்தி விற்ற சிறுவர் இல்ல நிர்வாகி கைது

திருச்சி அரசு மருத்துவமனையில் திருடப்பட்ட குழந்தையை போலீசார் கடந்த வாரம் மீட்டனர். இது தொடர்பாக, லால்குடியை சேர்ந்த தனமணி என்பவரை போலீசார் விசாரித்த போது, குழந்தைகளை கடத்தி விற்பனை செய்யும் கும்பல் பற்றி தெரிந்தது. தனமணி பல இடங்களில் இருந்து குழந்தைகளை கடத்தி வந்து நெல்லை மாவட்டம் வள்ளியூரில் விற்றுள்ளார். இதையடுத்து, புரோக்கர்களாக செயல்பட்ட முத்துசாமி, பரமசிவன் ஆகியோரை கைது செய்து போலீசார் விசாரித்தனர்.

விசாரணையில், பல இடங்களில் இருந்து குழந்தைகளை கடத்தி வந்து வள்ளியூர் அருகே உள்ள அன்பு சிறுவர் இல்லம் மூலம் விற்பனை செய்தது தெரியவந்தது. இல்லத்தை வள்ளியூரை சேர்ந்த ராஜன் என்பவர் நடத்துகிறார். இங்கு 47 குழந்தைகள் தங்கி படிக்கின்றனர். இந்த இல்லம், மத்திய, மாநில அரசுகளுடன் வெளிநாட்டு உதவியையும் பெற்று நடக்கிறது. கடத்தல் கும்பல், பல குழந்தைகளை கடத்தி வந்து அன்பு சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்துள்ளது. குழந்தைகளின் அழகுக்கு ஏற்றபடி காப்பக நிர்வாகி ராஜன் ரூ.2000 முதல் ரூ.5000 வரை கடத்தல் கும்பலுக்கு கொடுத்திருக்கிறார்.

பின்னர், அந்த குழந்தைகளை குழந்தை இல்லாத தம்பதிகளுக்கு ரூ. 40,000 – ரூ. 50,000 என்ற விலைக்கு ராஜன் விற்றிருக்கிறார் என்பதும் திருச்சி போலீசாரின் விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து, ராஜன் விற்ற 6 குழந்தைகளை போலீசார் மீட்டனர். மேலும், ராஜபாளையத்தை சேர்ந்த ஞானகுருவின் ஒன்றரை வயது குழந்தை மகாலட்சுமியை திருடி, விற்க இருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டது. அந்த குழந்தையை போலீசார் மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தனர். ராஜனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

**–தினகரன், 2009**

# அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கட்டமைப்பிலுள்ள கட்டுப்பாடுகள்

**ஜார்க்கண்ட் மாநிலத்தின் சாஹிப் கஞ்ச் மாவட்டப்பள்ளிகளில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் அமலாக்கம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் இன்றுள்ள ஏற்றத்தாழ்வான சமூக மற்றும் பொருளாதாரச் சூழலில் மாற்றத்தை உருவாக்கிட முக்கியமானவையாக வலியுறுத்தப்பட்ட அதிகாரப்பரவல், நெளிவு சுழிவான நெகிழும் தன்மையிலான கல்விமுறை ஆகியவற்றைக் கொண்டு செல்வதில் எவ்விதமான முன்னேற்றமும் காணவில்லை என்பதை அம்பலப்படுத்தியுள்ளன. இது அனைவருக்கும் கல்வி இயக்கம் அளிக்கும் கல்வி தரமானதாக இல்லை என்பதையும், இத்திட்டம் இன்றுள்ள சமூக உறவுகள், கட்டமைப்பிலுள்ள கட்டுப்பாடுகள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டு வடிவமைக்கப்பட வில்லை என்பதையும் தெளிவு படுத்துகிறது.**

தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பில், குறிப்பாக உயர்மட்ட அளவிலான அரசுப்பணிகள், அலுவல் பணிகள், ஆகியவற்றில் இட ஒதுக்கீடு என்பது அரசியல் சாசனத்திலேயே அளிக்கப்பட்டிருப்பினும் கூட, அவை நிரப்பப்படாமல் காலியாகவே இருக்கும் நிலை நீடித்துவருகிறது. அதே வேளையில் இம்மக்கள் அன்றாடக்கூலிகளாகவே வாழ்க்கை நடத்தும் அவலமும் தொடர்கிறது. இத்தகைய சூழல் அடிப்படைக்கல்வியில் அபிவிருத்தி காண்பதற்கு (குறிப்பாக ஊரகப் பகுதிகளில்) முயற்சி செய்ய வேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது. இதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளைச் சரியாக வளர்த்தெடுப்பதன் மூலம் இறுதியாக இட ஒதுக்கீடு என்ற தேவையே ஏற்படாத அளவுக்கு சமூகச் சுழல் பண்படுத்தப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இத்தகைய சூழலில் ஒவ்வொரு குழந்தையும் கல்வியில் சம வாய்ப்பு பெற வேண்டுமென்பதற்காக தொலை தூரத்திலுள்ள கிராமக் குடியிருப்புகளில் கூட ஆரம்பப்பள்ளிக் கல்வி சென்றடைந்து, ஆரம்பக் கல்வி அனைவருக்கும் பொதுவாக விளங்கிடும் நோக்கில் 2002 ஆம் ஆண்டு அனைவருக்கும் கல்வி இயக்கம் (Sarva Siksha Abhiyan) அறிமுகப் படுத்தப்பட்டது. மேலும், பள்ளி மேலாண்மையில் உள்ளூர் சமூகம் செயலூக்கத்துடன் பங்கேற்க வாய்ப்பளிக்கப்படுவதன் மூலம் சமூக, வட்டார, பாலியல் ரீதியான இடைவெளியை இட்டு நிரப்பி இணைப்பு ஏற்படுத்தப்படுவதும் இத்திட்டத்தின் மற்றொரு குறிக்கோளாகும். SSA திட்டம், வடிவமைக்கப்பட்ட வேளையில் கல்வியை ஒரு சமூக நிறுவனமாக அங்கீகரித்து, நிறுவனச் சீரமைப்பு, சமூக உடைமை, திறனை வளர்த்தல், ஆசிரியர்களது செயல்பாடு, போன்ற பல்வேறு பிரச்சினைகள் மீது தீவிர கவனம் செலுத்தப்பட்டது. ஆனால் இது வரையில் சமூகக் கட்டமைப்பை எதிர்கொள்வது, தரமான கல்வியை வழங்குவது என்பனவற்றில் அதன் செயல்பாடு சமச்சீராக இல்லை. தொலைதூர கிராமங்களுக்குத் தரமான கல்வியைக் கொண்டு செல்வதில் தனது குறிக்கோளை நிறைவேற்ற வழியில் ஏராளமான தடைக்கற்களைத் தாண்டிச் செல்ல வேண்டிய நிலையில் உள்ள ஜார்க்கண்ட் மாநிலம் இதற்கொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## ஒரு கிராமத்தில் செய்த ஆய்வு

நான் சமீபத்தில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் கல்வியறிவில் அனேகமாகக் கடைசி மாவட்டமாக விளங்கும் சாஹிப்கஞ்ச் மாவட்டத்தின் போரியோ ஒன்றியத்தில் உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். (கற்றோர் விகிதம் 37% , பெண்களில் கற்றோர் 26% , பழங்குடிப் பெண்களில் கல்வி கற்றோர் 2001–ஆம் ஆண்டில் 13 % ) இந்த ஒன்றியத்தின் மக்கள் தொகையில் 65 சதவீதம் பழங்குடிகள் என வரையறுக்கப்பட்டுள்ளனர். அனைவருக்கும் கல்வி திட்டத்தில் அதிகாரப்பரவல், கட்டமைப்பில் உள்ளூர் சூழலுக்கேற்றவாறு நெளிவு சுழிவான நெகிழும் தன்மை ஆகியவற்றுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பிலும் கூட, இத்திட்டத்தினால் இன்றுள்ள ஏற்றத்தாழ்வான சமூகப் பொருளாதாரச் சூழலில் எத்தகைய முற்போக்கான மாற்றத்தையும் ஏற்படுத்த இயலவில்லை என்ற உண்மை உள்ளங்கை நெல்லிக்கனியாக வெளிப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை அமலாக்கத்தால் ஏற்பட்ட ஒன்றல்ல. மாறாக தரம் குறித்த உணர்வு இன்மை ஒரு புறமும், சமூக உறவு நிலைகளையும், சமூகக்கட்டுப்பாடுகளையும் புரிந்து கொள்ளத்தவறியது மறுபுறமுமாக இருவிதக் காரணங்களும் இணைந்தே உள்ளன.

நான் சென்ற கிராமம் 330 வீடுகள் உள்ள ஓரளவு பெரிய கிராமமாகும். 176 சந்தால் மற்றும் மோலி (பழங்குடிகள்) வீடுகளும், 94 இந்து (இதர பிற்படுத்தப்பட்டவர்கள் (OBCS) மற்றும் தலித்துகள்) வீடுகளும், 60 இசுலாமிய வீடுகளும் உள்ளன. கிராமத்தின் நடுவே செல்லும் தொடர்வண்டிப் பாதை (Railway track) கிராமத்தை இரண்டாகப் பிரிக்கிறது. ஒரு பகுதியில் இந்துக்கள் வசிக்கின்றனர். (அவர்கள் அந்தப்பகுதியை தனியொரு இந்துக் கிராமம் என்றே கூறுகின்றனர்). இன்னொரு பகுதியில் பழங்குடிகளும் இசுலாமியர்களும் வசிக்கின்றனர். அரசு நடுநிலைப்பள்ளி இந்துக்கள் குடியிருப்பின் (தோலா tola என்கின்றனர்) மையத்தில் உள்ளது. அதே போலத்தான் அரசு சுகாதாரமையம், அஞ்சல் அலுவலகம், நுகர்பொருள் வழங்கும் கடை (Ration shop) மற்றும் தொலைபேசி மையம் ஆகியவையும், இந்து மக்கள் வசிக்கும் பகுதிக்குள்ளேயே அமைந்துள்ளன. கிராமத்தின் மற்ற பகுதியில் இந்த வசதிகள் எவையுமே இல்லை. விதி விலக்காக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழான அங்கன்வாடி மையம் ஒன்று இங்கு செயல்படுகிறது.

இந்த சமூகக் குழுக்கள் ஒவ்வொன்றின் வாழ்வாதாரச் செயல்பாடுகள் யாவுமே ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டதாகும். தாகுர், கும்ஹார், சாஹ், தேலி ஆகியோர் உள்ளிட்ட இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நடுநிலைப்பள்ளியருகே உள்ள சாலையில் வசிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் கல்வி கற்றவர்கள். அவர்களில் ஒருசிலர் தமது சாதிரீதியான தொழில்கள் புரியும் அதே வேளையில் அவர்களது வாழ்வாதாரம் அரசுத்துறைகளில் சம்பளம் பெறுகிற, பிரதானமாக ஆசிரியப்பணி, அதனோடு வங்கித் தொழில், காப்பீடு, சிறிய அளவிலான ஒப்பந்தப்பணிகள் மற்றும் இதழியல் ஆகியவற்றை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைப் போலவே கூலித் தொழில் செய்கின்றனர். இதன், கூடவே கைவிடப்பட்டுவிட்ட, செயல்படாத நிலக்கரிச் சுரங்கங்களில் சேகரம் செய்யப்படுகிற, அல்லது தேசிய அனல் மின் கழகத்தின் தொடர்வண்டிப் பாதைகளிலிருந்து கள்ளத்தனமாக அள்ளிக் கொண்டு வரப்பட்ட நிலக்கரியைக் கொண்டு வியாபாரம் செய்கின்றனர். சந்தால், மோலி வகுப்பினைச் சேர்ந்தவர்கள் (மூங்கில் தொழிலாளர்கள்) சொந்தமாக நிலம் வைத்திருக்கிறார்கள். தமது அத்தியாவசித் தேவைகளுக்கென விவசாயமும் செய்வதோடு, இவர்களில் பெரும்பான்மையினர் குறிப்பிட்ட காலங்களில் மேற்கு உத்தரப்பிரதேசத்தின் கரும்பு வயல்களுக்கோ அல்லது மேற்கு வங்கத்தின் நெல் வயல்களுக்கோ, கல் அரவை ஆலைகளுக்கோ பருவகாலங்களில் புலம் பெயர்ந்து செல்கின்றனர். இசுலாமிய சமுதாயக் குழுக்கள் பெரும்பாலும் சிறுவியாபாரம், தினக்கூலி, உத்தரப்பிரதேசம் மற்றும் டெல்லிக்குப் புலம் பெயர்ந்து அங்குள்ள ஆலைகளில் வேலை செய்வது, நிலக்கரி வியாபாரம் ஆகியவற்றைச் சார்ந்துள்ளன. இதர பிற்படுத்தப்பட்டோரில் உயர் மட்டத்திலுள்ள ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலோரது வாழ்வாதாரத்திற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. தேவையேற்படும் போது கிராமத்தை விட்டுச் செல்வது அல்லது திரும்புவது என்ற நிலையில், இந்த கிராமம் ஏறத்தாழ ஏழ்மை நிலையில் இருப்பதாகவே கருதப்பட இடமுண்டு.

இக்கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட துரித கதியிலான ஆய்வு, கிராம மக்கள் தொகையில் 32.4 சதவீதம் பேர் கல்வி கற்றவர்கள், 6.5 சதவீதம் மக்களே இடைநிலைக்கல்வி முடித்தவர்கள், ஒரே ஒரு சதவீதம் மட்டுமே பட்டதாரிகள் எனக்கூறுகிறது. ஆயினும், இதில் வகுப்பு அல்லது இன ரீதியாக மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. கல்வி கற்றோர் வீதத்தில் இந்து ஆண்கள் 53 சதவீதம் என்ற உயர்ந்த அளவிலிருந்து சந்தால், ஆண்கள் 20 சதவீதம் எனக் கீழிறங்கி, சந்தால் பெண்கள் 1.5 சதவீதம் என அதலபாதாளத்தில் வீழ்ந்து விடுகிறது. பள்ளிக்கூடம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்துள்ளது தான் இத்தகைய துயர நிலைக்கு ஓரளவு காரணம் என்பதை நாம் விளக்கமுடியும். பள்ளியிலிருந்து தங்களது குடியிருப்பைப் பிரித்து நடுவே செல்லும் இருப்புப்பாதை சந்தால் மற்றும் இசுலாமியக் குழந்தைகள் சந்திக்கும் ஒரு பிரச்சினை. இந்தப் பாதையில் நாளொன்றுக்கு நான்கு அல்லது ஐந்து முறைகளே தொடர்வண்டி கடந்து செல்கிறது என்றாலும் கூட, அது ஆபத்துவிளைவிக்கும் வாய்ப்புள்ளதாக, பள்ளிக்கு மாணவர்கள் வருகை குறைந்து போவதற்கான பிரதான காரணமாக இருக்கிறது.

2002 நவம்பரில் அனைவருக்கும் கல்வித்திட்டம் துவக்கப்பட்டபோது, பள்ளிக்கு வந்து செல்வதில் உள்ள இடர்பாடுகளைக் களைவதே அரசின் முன்னுரிமைக் கடமையாக விளங்கியது. இதன் காரணமாகவே அபியான் (SSA) பள்ளிகள் இசுலாமியக் குடியிருப்பில் ஒன்றும், மோலி குடியிருப்பில் ஒன்றுமாக (சந்தால் குடியிருப்பை யொட்டி) உருவாக்கப்பட்டன. அவற்றில் முன்னதில் படித்த உள்ளூர் இசுலாமிய இளைஞர் ஒருவர்,

பொருத்தமான கல்வித்தகுதி பெற்ற பழங்குடி இன இளைஞர்கள் இல்லாததால் பின்னதில் இந்து OBC இளைஞர் ஒருவரும் இணையாசிரியர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். குழந்தைகள் எண்ணிக்கை அதிகரித்ததால் இருபள்ளிகளுமே ஆரம்பப்பள்ளிகளாக ஜுன் 2006ல் தரமுயர்த்தப்பட்டு, புதிய ஆரம்பப்பள்ளிகள் எனப் பட்டியலிடப்பட்டன. இசுலாமியக் குடியிருப்புப் பள்ளியில் இரு ஆசிரியர்களும், மோலி குடியிருப்பில் ஒருவரும் (இந்த முறை படித்த சந்தால் இளைஞன் ஒருவர்) எனக் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். பள்ளிக்கட்டிடம் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகளுக்கு அனுமதியாகியது. கல்வி கற்பித்தலில், பள்ளிக்கு வந்து செல்வது, தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றில் முன்னேற்றம் கொணருவது மிக முக்கியமான ஒன்று என வலியுறுத்தப்பட்டது.

புதிய ஆரம்பப்பள்ளிகளில் (NPS) மதிய உணவும் அளிக்கப்பட்டது. கல்வியியல் ரீதியான ஆதார உதவிகளுக்காக தொகுதி வள ஆதார மையம் (CRS) ஒன்று இடைநிலைப்பள்ளி வளாகத்திலேயே கட்டப்பட்டது. (இப்பள்ளி 2007ல் உயர் நிலைப்பள்ளியாக தரமுயர்த்தப்பட்டது) ஆசிரியர்களுக்கு உதவிகரமாக இருப்பதற்காக நவம்பர் 2005ல் கல்வியியல் பொறுப்பாளர், மிகக்குறிப்பாக கணிதம் மற்றும் அறிவியலுக்கென ஒருவர் நியமிக்கப்பட்டார். முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் தோன்றின. ஒவ்வொரு குடியிருப்பிலும் ஆரம்பப்பள்ளி உருவாக்கப்பட்டு, கல்வியியல் ரீதியிலான ஆதார வளத்தை உருவாக்குவதன் மூலம் தரமான கல்வி அளிக்கப்பட வேண்டுமென்ற கவனத்தோடு கூடவே, பள்ளி உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

## ஒரு ஒப்பீடு :

துரதிர்ஷ்ட வசமாக, களத்தில் உள்ள யதார்த்த நிலை இத்தகையதாயில்லை. மூன்று பள்ளிகளின் நிலையை ஒன்றோடு ஒன்று ஒப்பிடுகையில் கிடைக்கும் விடை கவலையளிப்பதாக இருக்கிறது. வெவ்வேறு தரக்கோட்பாடுகள் நிர்ணயம் செய்வது, வெவ்வேறு வகைப் பள்ளிகளுக்கான வெவ்வேறு விதிகள், இதன் விளைவாக அரசுக்கல்வி அமைப்புக்குள் ஒரே பகுதியிலேயே கல்வியில் சமத்துவமின்மை நிலவுவதை இது சுட்டிக்காட்டுகிறது.

இந்துக் குடியிருப்பில் உள்ள நடுநிலைப்பள்ளியில் எட்டு நிரந்தர ஆசிரியர்கள், நான்கு முறையான கட்டிடங்கள், ஒரு அடிபம்பு, கழிப்பறைகள், ஒரு கணிணி அறை (மின்சாரம் இல்லாததால் இது செயல்படவில்லை) ஆகியவை உள்ளன. தாழ்த்தப்பட்ட, பழங்குடிக் குழந்தைகள் அனைவருக்கும் தாமதமாக வேனும் இலவச புத்தகங்கள் கிடைக்கின்றன. இதுவன்றி அவர்கள் கல்விச் செலவை ஈடுகட்ட கல்வி உதவித்தொகை கிடைக்கிறது. தாழ்த்தப்பட்ட பழங்குடிச் சிறுமிகள் தமது கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் ஜார்க்கன்ட் கல்வித்துறையால் அவர்களுக்கு மிதிவண்டி அளிக்கப்படுகிறது. கிராமத்து மக்களில் பெரும்பாலோர் தமது ஆரம்பக்கல்வியை இந்தப் பள்ளியில் தான் பெற்றுள்ளனர். 2006 மற்றும் 2008ல் புதிதாகப் பள்ளியில் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை கூடுதலாகியுள்ளது. இந்த சேர்க்கைப்பட்டியலில் இசுலாமிய, பழங்குடிக்குழந்தைகள் குறைந்து வருகின்றன. தற்போது அவரவர் சொந்தக்குடியிருப்புகளில் பள்ளிகள் துவக்கப்பட்டு, அங்கு சேர்க்கை எண்ணிக்கை அதிகரித்துள்ளதை மேற்கண்ட பள்ளியில் எண்ணிக்கை குறைந்ததற்குப் பல்வேறு காரணங்களில் ஒன்று எனக் கொள்ளலாம். இதில் கவலையளிக்கும் விசயம் என்னவென்றால், ஆரம்பப்பள்ளியில் கல்வியை நிறைவு செய்யும் இசுலாமியக் குழந்தைகள் எவருமே தமது கல்வியைத் தொடர இந்த இடைநிலைப்பள்ளிக்கு வந்து சேருவதில்லை என்பதே.

## முரண்பாடான காட்சிகள் :

இரண்டு புதிய பள்ளிகளுக்கும் சென்ற போது அங்கு கண்ட காட்சிகள் ஒன்றுக்கொண்று முரணாக இருந்தன. இசுலாமியக் குடியிருப்பில் உள்ள பள்ளிக்கு ஒரு முறையான கட்டிடம், மூன்று ஆசிரியர்கள், (இவர்கள் அனைவரும் உள்ளூர் இசுலாமிய இளைஞர்கள்), மூன்று முதல் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயன்பெறும் வகையிலான ஒரு பால்வாடிமையம், சத்துணவு வசதி ஆகியவை அமைந்துள்ள அதே வேளையில், மோலி குடியிருப்பில் உள்ள பள்ளிக்காட்சி இதற்கு எதிர்மறையாக உள்ளது. கட்டிடப்பணி இன்னும் முடிவுறவில்லை. அந்தப்பள்ளி இன்னமும் கிராமக்கல்விக் குழுவின் தலைவர் வீட்டுத் திண்ணையில் தான் செயல்படுகிறது. எப்போதேனும் வருகிற பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர் பாடம் நடத்துகிறார்.

கிராமக்கல்விக் குழுவின் தலைவர் ''நான் அவரைப் பலமுறை அழைத்தேன். ஆனால் அவர் வருவதில்லை. கடந்த மூன்று மாதமாக பள்ளி நடக்கவில்லை. வங்கிக்குச் செல்ல வேண்டும் அல்லது ஒரு கூட்டத்திற்குச் சென்று அறிக்கை

சமர்ப்பிக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார். அதிகார பூர்வமாக 75 குழந்தைகள் பதிவு செய்துள்ள இந்தப்பள்ளி செயல்படுவதேயில்லை. 20 முதல் 25 குழந்தைகள் தனியார் அல்லது மிஷனரி பள்ளிக்குச் செல்கிறார்கள். நான் எனது மூன்று குழந்தைகளை பாத்ராமிஷன் பள்ளிக்கு அனுப்புகிறேன். அதற்குச் செலவாகிறது. ஒரு குழந்தைக்கு ஆண்டொன்றுக்கு ரூ.4,000 வரை செலவு செய்ய வேண்டியிருக்கிறது. வேறென்ன செய்ய ? '' என்று சொல்கிறார்.

இதே கருத்தை மற்ற பலரும் ஆமோதிக்கிறார்கள். உள்ளூர் பள்ளியின் மோசமான நிலைகாரணம் அவர்கள் கல்விக்கும் அதனோடு ஆரோக்கியத்திற்கும் தமது வருவாயில் பெரும் பகுதியைச் செலவிட வேண்டியிருக்கிறது. 14 குழந்தைகள் இங்கிருந்து ஏறத்தாழ 5 முதல் 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பாத்ரா மிஷன் பள்ளிக்கும், அதே எண்ணிக்கையிலான குழந்தைகள் பாலிதியிலுள்ள ஹோலி கிராஸ் மிஷன் பள்ளிக்கும் சென்று பயில்கிறார்கள். பெரும்பாலான குழந்தைகள் பள்ளிக்கு அன்றாடம் நடந்தே சென்று அவ்வாறே திரும்புகிறார்கள். தரமான கல்விபெற இவ்வாறு சென்று வருவது தக்கதே என்று பெற்றோரும் கருதுகிறார்கள். இந்தப் பள்ளிகள் அரசு உதவிபெறுபவையல்ல. எனவே கல்விக் கட்டணம் மிக அதிகம். மாதந்தோறும் 400 முதல் 500 ரூபாய் வரை கல்விக் கட்டணம் உண்டு. அரசுப்பள்ளியில் பயிலும் பழங்குடிக்குழந்தைகள் அரசின் கல்வி உதவித்தொகை பெறுகின்றன. ஆனால் மிஷனரி பள்ளிகள் அரசு அங்கீகாரம் பெறவில்லையாதலால் அங்கு பயிலும் பழங்குடிக் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை கிட்டாது. அதே போல மதிய உணவும் இல்லை. உணவு மிக முக்கியம் என்கிற அதே வேளையில் இதுபோன்ற ஏழ்மையான குடியிருப்பில் உள்ள குழந்தைகளுக்குத் தரமான கல்வி வழங்கப்படாமையை எவ்வகையிலும் நியாயப் படுத்த இயலாது.

நான் இந்தப் பிரச்சனை குறித்து இடைநிலைப் பள்ளியின் தலைமையாசிரியையிடம் விவாதித்தேன். அவர் சந்தால் வகுப்பைச் சேர்ந்தவர். அவர் ''இந்தப் புதிய பள்ளிகள் ஆரம்பப்பள்ளிகளாக தரமுயர்த்தப்பட்டு விட்டன. அந்தந்தப் பள்ளிகளுக்கென மாணவர் சேர்க்கை எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே நான் மோலி பள்ளியின் மாணவர் சேர்க்கை எல்லைக்குட்பட்ட குழந்தைகளை இந்த நடுநிலைப் பள்ளியில் சேர்ப்பதற்கு விதி அனுமதிக்காது'' எனப் பிரச்சினையை விளக்கினார். ''பணம் செலவிட வசதியுள்ளவர்கள் மிஷன் அல்லது தனியார் பள்ளிக்குத் தமது குழந்தைகளை அனுப்புகிறார்கள். மற்றவர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டுள்ளது'' என்பதை அவர் ஒப்புக் கொண்டார். மோலி பள்ளியின் ஒன்றையாசிரியர் தமது பள்ளி சம்மந்தமாக பல பிரச்சினைகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போகிறார். பள்ளியில் போதுமான உள்கட்டமைப்பு வசதியில்லை, கல்வி உதவித்தொகை இல்லை. தமது குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதைக் காட்டிலும் கால் நடைகளை மேய்க்க அனுப்புவதற்கே அக்கறை காட்டுகிற பெற்றோரின் போக்கு இன்னும் இது போன்ற பல, ஆயினும் இது தப்பித்துக் கொள்வதற்காக கூறுகிற சாக்குப் போக்கு என்றே கொள்ளலாம், ஏனெனில் குழந்தைகளின் கல்வியில் பெற்றோருக்கு அக்கறையில்லை என்பதாக பெற்றோரைக் குற்றம் சாட்டுவது பொருத்தமாகாது. ஏனெனில் மேலே விளக்கியது போல உண்மையான காரணம் அதுவல்ல. உண்மையில் 2006–07ல் சந்தால் ஒருவர் ஆசிரியராக இருந்தபோது குழந்தைகள் வருகை அதிகமாக இருந்தது.

அவர் '' இப்போதுள்ள ஆசிரியரை விட எனக்கு கூடுதலான கல்வித் தகுதி இருக்கிறது. ஆனால் என்னால் வலிமையாக வாதாட இயலவில்லை. ஆகவே நான் இந்தப் பள்ளியில் 10 ஆண்டுகால ஒப்பந்த அடிப்படையில் ஒரு உதவியாளராக மாதம் ரூ.2000 சம்பளத்திற்கு வேலை செய்கிறேன். நான் தான் எனது குடும்பத்தைத் தாங்கவேண்டும். இந்த வருவாய் எனக்குப் போதவே போதாது. கையூட்டு கொடுக்க என்னிடம் பணமில்லாததால் நான் இந்த வேலையைப் பெறமுடியவில்லை '' என்று கூறினார்.

ஆயினும் அவர் அக்டோபர் 2007ல் அருகாமையிலுள்ள ஒன்றியத்தில் கிராமப்புற வேலை உறுதியளிப்புத் திட்டத்தை அமலாக்குகிற மக்கள் நலப் பணியாளராகச் சென்று சேரும் காலம் வரையில் இப்பள்ளியில் கடுமையாக உழைத்தார். எல்லாக் குழந்தைகளும் நன்றாகப் படிக்க வேண்டும் என அவர் ஊக்கமூட்டினார். எல்லா விசயங்களையும் அவர் சந்தாலி மொழியிலேயே விளக்கினார்.

## முடிவாக :

இங்கு குழந்தைகள் மற்றும் ஆசிரியர் ஆகிய இருபாலரையும் பாதிக்கிற பாகுபாடான ஒதுக்கல் முறையைப் பிரதிபலிக்கிற இரண்டு முக்கியமான பிரச்சினைகள் உள்ளன. முதலாவதாக இந்தப் புதிய ஆரம்பப்பள்ளிகளில் நிரந்தரமாக உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன. ஆனால் இந்தத் துவக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குக்

கல்வி உதவித்தொகை பெறும் தகுதி இல்லை. ஏற்கனவே சொன்னதுபோல பழங்குடி மக்களில் பெரும்பான்மையோர் சொந்தமாக நிலம் வைத்துள்ளனர். ஆனால் அவர்கள் வாழ்நிலை கொடிய வறுமைதான். குழந்தைகள் அவ்வப்போது பள்ளிக்குச் செல்வதை விடுத்து வேலைக்குச் செல்வதற்கு இது ஒரு காரணம். குழந்தைகள் இடைநிலைப்பள்ளியில் சேர்க்கப்படுமானால் அவர்களுக்குக் கல்வி உதவித்தொகை கிடைக்கும். ஆனால் அவர்களை இடைநிலைப் பள்ளியில் சேர்க்க விதிப்படி அனுமதியில்லை. அவர்களது சொந்தப்பள்ளியிலோ கல்வி உதவித் தொகை கிடைக்க விதி இடம் கொடுக்காது.

இரண்டாவதாக, அரசு அறிவிக்கையின்படி, இந்தப் புதிய ஆரம்பப்பள்ளிகளில் இணையாசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்படலாம். அவர்கள் நன்குபடித்த, உள்ளூரைச் சேர்ந்த இளைஞர்களாக இருந்தாலும் கூட மாதம் ரூ.3000 என்ற சம்பளத்திற்கு ஒப்பந்தக் கூலிகளாகத்தான் வேலை செய்ய வேண்டும். கல்வி கற்பிக்கும் பணியில் அக்கறையோடு செயல்படும் இவர்கள், வருவாய் ஆதாரத்திற்கு வேறு கூடுதலான பணிகளைச் செய்தாக வேண்டிய கட்டாயச் சூழலில் உள்ளனர். அவர்கள் நாளொன்றுக்கு மிக அதிகபட்சமாக அரை நாள் பாடம் நடத்துகிறார்கள். ஜார்க்கண்ட் மாநிலத்தில் இணை ஆசிரியர்களாகப் பணியாற்றுவோரின் எண்ணிக்கைக் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பெருகி வருகிறது. இந்த இரு ஆண்டுகளாக அரசோடு இவர்கள் பல்வேறு கட்டப்பேச்சு வார்த்தைகள் நடத்தி முடித்த பிறகும் அறிவிக்கப்பட்டுள்ள புதிய வழிகாட்டு நெறிமுறைகள் உற்சாகமளிப்பதாயில்லை. மாதாந்திரச் சம்பளத்தை ரூ. 5,100 வரை உயர்த்தலாம். அதற்குச் சில நிபந்தனைகள் உள்ளன. இவற்றில் முக்கியமானது அவர்கள் எக்காலத்திலும் தம்மை நிரந்தரமான அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென உரிமை கோர இயலாது. ஆனால் இதற்கு மாறாக, பீகாரில் 60 வயது வரையுள்ள இணையாசிரியர்கள் அனைவரையும் நிரந்தர ஊழியர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ.5000, மூன்றாண்டுக் கொருமுறை மாதாந்திரச்சம்பளத்தில் ரூ.500 உயர்த்தி வழங்கப்படும்.

ஏறத்தாழ மெட்ரிக்குலேசன் கல்வியை மட்டுமே முடித்த நிரந்தர ஆசிரியர்கள். இந்த இணையாசிரியர்களைப் போல மூன்று மடங்குச் சம்பளம் பெறுகிற சூழலில், இருவித ஆசிரியர்களுக்கு மிடையேயுள்ள சம்பள வேறுபாடு பளீரெனத் தெளிவாகத் தெரிந்தாலும் கூட, புதிய அறிவிப்பு ஓரளவுக்காவது வேலை செய்வதற்கான ஊக்கமளிப்பதாக இருக்கிறது. கல்வித் தரத்தில் முன்னேற்றம் காண்பதற்கு ஆசிரியரின் ஊக்கமே மைய சக்தி என்ற நிலையில் ஜார்க்கன்டில் இது மிகவும் சக்தியற்றுப் போயிருக்கிறது.

நிதி ஒதுக்கீடுகளுக்கு அப்பாற்பட்டு, கல்வித் தரத்தை உயர்த்தும் நடவடிக்கையில் மற்றொரு தலையீடு தொகுதி, ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவிலான வள ஆதார மையங்களை உருவாக்குவது. தொகுதி வள ஆதார மையத்தின் பொறுப்பாளர் சுழற்சி முறையில் பள்ளிகளுக்குச் சென்று ஆய்வு செய்வதோடு, நிறைவேற்ற வேண்டிய ஒரு மிக முக்கியமான கடமை, கற்பிக்கும் பாடங்களில் தரத்தை உயர்த்துவது சம்மந்தமாக தலைமை ஆசிரியர்களோடு ஒரு முறை, உதவி ஆசிரியர்களோடு ஒரு முறை என தொகுதிவள ஆதார மையத்தில் மாதமிருமுறை கூட்டம் நடத்த வேண்டியது. ஏராளமான அறிக்கைகள் சமர்ப்பிக்கும் பணியே அதிகளவு சுமையாக இருப்பதன் காரணமாக கல்வியியல் சம்மந்தமாக கவனம் செலுத்தும் நேரம் மிகக்குறைவு என அந்தத் தொகுதி வள ஆதாரமையப் பொறுப்பாளர் ஒப்புதலளிக்கிறார்.

கிராமவாசியொருவர் என்னிடம் பேசும் போது "இவ்வளவு பணம் செலவழிக்கப்பட்ட பின்னரும், அரசுக்கல்விமுறை ஏன் வெற்றிகரமாகச் செயல்படவில்லை? தனியார் மற்றும் மிஷனரிப் பள்ளிகளில் இது போன்ற பிரச்சினை இருப்பதாகத் தெரிய வில்லையே?" என்று கேள்வி எழுப்பினார். இதற்கு என்னால் உடனடியாக பதிலளிக்க இயவில்லை. ஆனால் மேற்கண்ட காட்சி பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. வறியோருக்குக் கல்வியளிக்க வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு, வலிமையானவர்கள் வாய்ப்பைக் கைப்பற்றிக் கொள்வதைத் தவிர்ப்பதற்காக முறையான ஆசிரியர் நியமன முறை, வெறுமனே பக்கம் பக்கமாக அறிக்கைகளைத் தொகுத்து அளிப்பதாக அன்றி நேர்மையான முறையில் வள ஆதாரங்களை வழங்கிட ஆசிரியர்களின் உதவி மற்றும் கல்வியியல் ரீதியிலான உதவி ஆகியவை இந்த நேரத்திலாவது அளிக்கப்பட வேண்டும். ஆனால் களத்திலுள்ள உண்மை நிலை இதைப் பிரதிபலிப்பதாயில்லை. மேலும் பள்ளிக்கல்வி முறையை அரசு ஆரம்பப்பள்ளிகள், புதிய ஆரம்பப்பள்ளிகள் எனப் பிரித்துப்பார்ப்பது எவ்வகையிலும் உதவிகரமானதாயில்லை. முன்னதில் சேர்க்கப்படுகிற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, நிரந்தர ஆசிரியர்கள் எல்லாம்

இருக்கும்போது பின்னதில் இவை எதுவுமே இல்லை. தொலைதூரப் பகுதிகளில், அரசுப்பள்ளிகளில் சேர்க்கப்படுவதற்கு வாய்ப்பில்லாத நிலையில் புதிய ஆரம்பப்பள்ளிகள் யாவும், சமூகத்தின் மிக வறிய, மிக விளிம்பு நிலைக்கு ஒதுக்கித்தள்ளப்பட்ட, கல்வியறிவில் மிகப்பின் தங்கியுள்ள பகுதியினருக்காகவே ஒதுக்கப்பட்டவையாக உள்ளன என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள இயலும். ஆயினும் இம்மக்கள் தான் ஆசிரியர் தரம், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் சலுகைகள் மறுக்கப்படுவது தொடர்ந்து நீடிக்கிற மக்கள் பகுதியினராக இருக்கிறார்கள். இந்தியா தம் மக்கள் அனைவருக்கும் தரமான கல்வி அளிக்க வேண்டுமென உண்மையாகவே விரும்புமானால், இதுபோன்ற கட்டமைப்புக் கட்டுப்பாடுகள் உடனடியாக அகற்றப்படவேண்டும்.

**– Economic & Political Weekly, 2009**

## பள்ளிகளுக்கு அங்கீகாரம் சிக்கல் தீர்க்க தனி குழு

பள்ளிகளுக்கு அரசின் அங்கீகாரத்தை பெறும் போதும், புதுப்பிக்கும்போதும் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை எளிமைப்படுத்துவது குறித்து, பரிந்துரைக்க, ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்., அதிகாரி விஜயகுமார் தலைமையில், குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலர் குற்றாலிங்கம் கூறியிருப்பதாவது: அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் துவக்க அங்கீகாரம் பெறும் போதும், அங்கீகாரம் புதுப்பிக்கும் போதும், பள்ளிக்கல்வித் துறை அல்லாத பிற துறைகளிடம் இருந்து தடையின்மைச் சான்று பெற வேண்டியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடம், கட்டட உரிமம், கட்டட உறுதிச் சான்று, தீயணைப்புத் துறை தடையின்மைச் சான்று, சுகாதாரத் துறைச் சான்று ஆகியவற்றை பெறுவதில் அதிக கால தாமதம் ஏற்படுகிறது. இதனால், அங்கீகாரம் கிடைப்பதில் சிக்கல்கள் உருவாகி, பொதுத்தேர்வுக்கு மாணவர்கள் செல்லும் போது பள்ளிக்கு அங்கீகாரம் இல்லாத நிலை உருவாகிறது.

எனவே, பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் நடைமுறைகளை எளிமைப்படுத்துமாறு அரசுக்கு பள்ளி நிர்வாகங்கள் கோரிக்கை அனுப்பி வருகின்றன. ஆரம்ப அங்கீகாரம் பெறும் போதும், தொடர் அங்கீகாரம் பெறும் போதும் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை எளிமைப்படுத்துவது குறித்த வழிகளை ஆராய்ந்து, அரசக்கு பரிந்துரை செய்ய, உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது.

ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்., அதிகாரி எம்.பி., விஜயகுமாரை தலைவராகக் கொண்டு, ஓய்வு பெற்ற பள்ளிக்கல்வி இயக்குனர் ஜெகநாதன், பள்ளிக் கல்வி இயக்குனர் பெருமாள்சாமி, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குனர் மணி ஆகியோர் உறுப்பினர்கள்.மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இணை இயக்குனர் பிச்சை உறுப்பினர் செயலராகவும் இந்த உயர்மட்டக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழு, இதுபற்றி பரிசீலித்து மாணவர் பாதுகாப்பு, பள்ளி நலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு உரிய பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்கும். இவ்வாறு குற்றாலிங்கம் தெரிவித்துள்ளார்.

**– தினமலர், 21.1.09**

# அலட்சியத்தால் நிகழும் படுகொலை

**அபாயகரமான உற்பத்தி ஆலைகளில் குழந்தைகள் மரணமடைவது ஒரு வழக்கமாகவே இருக்கிறது. எப்போது நாம் செயல்படப் போகிறோம் ?**

கடந்த ஏப்ரல் 10ஆம் நாளன்று வட மகாராஷ்டிராவின் ஜல்கோவான் மாவட்டத்தின் பரோலா கிராமத்திலுள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் நிகழ்ந்த மிகப் பெரிய வெடிவிபத்தில் 10 பெண்கள் 6 குழந்தைகள் உட்பட 24 தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர். எதிர்பார்த்தது போலவே சிவசேனா கட்சியைச் சேர்ந்த உள்ளூர் நகராட்சித் தலைவருக்குச் சொந்தமான அந்த ஆலை பாதுகாப்பு விதிமுறை மீறலுக்காக உரிமம் இரத்து செய்யப்பட்ட பின்னரும், கடந்த ஆறுமாதங்களாகச் சட்ட விரோதமாகச் செயல்பட்டு வந்துள்ளது. இந்த துயரச் சம்பவத்திற்குக் காரணமானவர்களின் குற்றச்செயல் தேர்தல் பிரச்சாரக் காலத்தின் இரைச்சலில் மங்கி மறைந்துவிட்டது. இதே போல இது பற்றிய குற்றவியல் நீதிபதியின் விசாரணை முடிவுகளுக்கும் கூட, இதற்கு முன்னர் இது போன்ற சம்பவங்களில் உத்தரவிடப்பட்டு நடைபெற்ற விசாரணை அறிக்கைகளுக்கு ஏற்பட்ட கதியே ஏற்படும் என நாம் யூகித்துக் கொள்ளலாம்.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மகாராஷ்டிராவின் பீட் மாவட்டத்திலுள்ள நெக்னூர் கிராமத்தின் பட்டாசுத் தொழிற்சாலையில் பணிநேரத்தில் நிகழ்ந்த தீவிபத்தில் பதினைந்து முதல் பதினேரு வயதுக்குட்பட்ட ஏழு சிறுமிகள் மரணமடைந்தனர். இந்த ஆலையும் கூட தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாமல் சட்டவிரோதமாகவே செயல்பட்டு வந்ததாகும். அரசாங்கமோ அல்லது பொதுமக்களோ இது போன்ற விபத்துக்கள் குறித்து எவ்விதமான அக்கறையும் செலுத்தாததன் காரணமாக இதுபோன்ற சட்டவிரோதமாகச் செயல்படும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் நிகழும் மரணங்கள் குறித்த செய்திகள் உணர்ச்சியற்ற முறையில் ஊடகங்களில் தொடர்ச்சியாக வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

2008 ஆகஸ்ட் 27 அன்று இராஜஸ்தான் மாநிலத்தின் பரத்பூர் பட்டாசுத் தொழிற்சாலை வெடிவிபத்தில் 12 குழந்தைகள் உள்ளிட்ட 27 தொழிலாளர்கள் மரணமடைந்த அதே வேளையில், மேற்கு வங்கத்தின் 24 பர்கானா மாவட்டத்திலுள்ள சட்டவிரோத பட்டாசுத் தொழிற்சாலையில் நிகழ்ந்த தீவிபத்தில் 11 முதல் 15 வயதுக்குட்பட்ட மூன்று தொழிலாளர்கள் உயிரோடு கருகிப்போயினர்.

இது போன்ற ஆலைகள் ஏறத்தாழ எல்லாவற்றிலுமே இரண்டு விதமான அம்சங்கள் நீங்காது இடம் பெற்றுள்ளன: இந்த ஆலைகள் பாதுகாப்பு விதிகள் மற்றும் பதிவு சம்மந்தமான விதிகள் எவற்றையுமே பின்பற்றுவதில்லை. அதோடு இவை ஏராளமான குழந்தைகளைப் பணியில் அமர்த்தியுள்ளன. இவை இரண்டிலுமே அரசுத்துறைகள் அலுவல்பூர்வமான அறிவிப்புகள் அல்லது அறிக்கைகளுக்கும் அங்குள்ள எதார்த்தமான நிலைமைகளுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

2006ஆம் ஆண்டு மத்திய அரசு, வீட்டுப் பணியாளர்களாகவும், உணவகங்கள், விடுதிகள், ஓய்வு இல்லங்களில் சிறுவர்களைப் பணியமர்த்துவதற்கும் தடைவிதித்த பின்னர் (இத்தகைய தடையை வெவ்வேறு துறைகளுக்கும் குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1986ன் கீழ் விரிவாக்கம் செய்தது மத்திய அரசு) குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றாக ஒழித்திட ஒரு செயல்திட்டத்தை வகுத்ததோடு, திட்ட அமலாக்கத்திற்கென ரூ. 18.65

**இது போன்ற விபத்துக்கள் குறித்து எவ்விதமான அக்கறையும் செலுத்தாததன் காரணமாக இதுபோன்ற சட்டவிரோதமாகச் செயல்படும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் நிகழும் மரணங்கள் குறித்த செய்திகள் உணர்ச்சியற்ற முறையில் ஊடகங்களில் தொடர்ச்சியாக வெளியாகிக் கொண்டிருக்கின்றன.**

கோடியை ஒதுக்கீடு செய்த முதல் மாநிலமாக மகாராஷ்டிர மாநிலம் விளங்கியது. மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் செயல்படும் வகையில் நகராட்சி நிர்வாகங்கள், காவல்துறை, தன்னார்வ அமைப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறப்புப்பணிக்குழு அமைக்கப்பட்டது. மீண்டும் 2008ல் மும்பை உயர்நீதிமன்றத்திற்குத் தான் அளித்த உறுதிமொழிப் பத்திரத்தில் 2008ஆம் ஆண்டு முடிவதற்குள் குழந்தைத் தொழிலாளர்களை அபாயகரமான பணிகளில் ஈடுபடுத்துவதை முற்றாக ஒழிக்கவும், 2010 முடிவுக்குள் மாநிலத்தின் எல்லைக்குள் குழந்தைத் தொழிலாளர் முறையையே முற்றாக ஒழித்துக்கட்ட உறுதியுடன் செயல்படவிருப்பதாகவும் தெரிவித்தது. எனினும், தற்போது மும்பையில் குழந்தைகள் வீட்டு வேலை செய்வோராகவும், ஓட்டல் தொழிலாளர்களாகவும் பணி செய்வது மட்டுமல்லாது, ஆயத்த ஆடை மற்றும் அலங்காரத் தையற்பணிக் கூடங்களிலும், வாகனங்கள் பழுதுபார்க்கும் பட்டறைகளிலும், பாத்திரங்கள் தயாரிக்கும் ஆலைகளிலும் நீண்ட நேரம் வேலை செய்வது தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. நகர எல்லைக்கு வெளியேயும் ஏராளமான குழந்தைகள் வீட்டிலேயே செயல்படும் சிறிய உற்பத்திக் கூடங்களில் வேலை செய்து வருகின்றனர்.

இது போன்ற ஆலைகளையும், அவற்றில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவது குறித்து கண்காணிக்கவும், தடைவிதிக்கவும் சட்டரீதியான வழிகளுக்குப் பஞ்சமில்லை. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 374 வது பிரிவு, சிறார் நீதிச் சட்டம் 2000, ஆகியவற்றோடு தொழிற்சாலைகள் சட்டம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், கொத்தடிமைத் தொழிலாளர்கள் சட்டம், கடைகள் மற்றும் நிறுவனங்களின் தொழிலாளர்கள் சட்டம், குறைந்தபட்சக் கூலிச் சட்டம் போன்ற தொழிலாளர் சட்டங்களிலும் கூட இவற்றுக்கான வழிவகைகள் உண்டு. மேலும் பாதுகாப்பு சம்மந்தமான அளவுகோள்களைப் பொறுத்தமட்டிலும், தொழிற்சாலைகள் சட்டம் 1987, வெடி பொருட்கள் சட்டம் 1884 வெடிபொருட்கள் விதிகள் 1993 (பிற சட்டங்களோடு கூடவே) ஆகியற்றிலும் கூட பல்வேறு அதிகார அமைப்புக்கள் ஆலைகளில் காலமுறையில் சோதனை செய்வது குறித்து விதிகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், இது போன்ற சோதனை நடவடிக்கைகள் போதிய அக்கறையோடு செய்யப்படுவதில்லை, அல்லது உரிய காலமுறையில் செய்யப்படுவதில்லை என்பதோடு, எல்லா ஆலைகளையும் தொடர்ச்சியாக உரிய காலத்தில் சோதனை செய்வதற்குப் போதுமான எண்ணிக்கையில் பணியாளர்கள் இல்லை என்று சாக்குப்போக்குகள் கூறுவதும் வழக்கமான ஒன்றாகும். உதாரணமாக, பொசாரி, ஆகுர்தி, நிக்தி மற்றும் புனேவின் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள ஆலைகளில் (இங்கெல்லாம் அபாயகரமான உற்பத்திக் கூடங்கள் காளான்களைப் போலப் பெருகி வருகின்றன) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலைமைகளை மேற்பார்வையிடும் பொறுப்பிலுள்ள அலுவலர், ஒருவர் தொழிலகப் பாதுகாப்பை அமலாக்கம் செய்வதில், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறைக்கு குறிப்பிட்ட, ஒரு எல்லைக்குட்பட்ட பாத்திரமே இருக்கிறது எனக் கூறியதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது. தமது துறைக்கென விதிக்கப்பட்ட கடமைகளை முழுமையாக நிறைவேற்றுமளவுக்குத் தேவையான ஆள்பலமில்லை. எனவே தமது துறையின் தொழிற்சாலை ஆய்வாளர்கள் ஆலைப் பாதுகாப்பு விதிகளை முழுமையாக அமலாக்க வேண்டுமென ஆலை முதலாளிகளைப் பின் தொடர்ந்து சென்று காவல்துறையினரைப் போல புலனாய்வு செய்வார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது எனவும், ஆலை நிர்வாகங்கள் ஆலைப் பாதுகாப்பு விதிகளைத் தாமே ஊக்கத்தோடு அமலாக்க வேண்டுமெனவும் அப்பத்திரிகைச் செய்தியில் அந்த அலுவலர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

குழந்தைத் தொழிலாளர் நீடித்து வருவதற்கு வறுமை, சாதீய ஒடுக்குமுறை, சமூகப் புறக்கணிப்பு ஆகிய குறிப்பிடத்தக்க காரணங்கள் உள்ளன. இதனால் குழந்தைத் தொழிலாளர் முறை தொடர்வதற்கு ஏதுவாக இருக்கின்றது. ஆயினும் இவை சீரமைக்கப்பட வேண்டிய அதே வேளையில் சட்ட விரோதமான, அல்லது சட்டரீதியாக அனுமதி பெற்ற பட்டாசுத் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களும், அதேபோல எல்லாவிதமான அபாயகரமான உற்பத்தி ஆலைகளின் உரிமையாளர்கள் உரிய முறையில் உள்ளாட்சி அமைப்புகளால் கண்காணிக்கப்பட வேண்டியதும் அதே அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஜல்கோவான் மற்றும் பீட் ஆகிய இடங்களில் நிகழ்ந்த விபத்துக்களை அடுத்து பொதுமக்கள் குரல் ஓங்கி ஒலித்தது போல எல்லா இடங்களிலும் நிகழ்ந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

**–Economic & Political Weekly, 2009**

# குழந்தைகளைச் சீரழிக்கும் கொடுமைக்கு முடிவு?

**– டாக்டர். ஐ. சத்திய சுந்தரம்**

சமூக நெறிகள் சீர்குலைக்கப்படும்போது, தீமைகள் தலைவிரித்தாடும். பெண்கள் மீதான தாக்குதல் இச்சமூக சீர்குலைவின் ஒரு வெளிப்பாடாகும். அதுபோலவே குழந்தைகளைச் சீரழிக்கிற கொடுமை இப்போது எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது. ஏனெனில் குழந்தைகள் சமுதாயத்தின் ஒரு மென்மையான, பலவீனமான பகுதியாயிருக்கிறார்கள். எல்லாக்குழந்தைகளும் ஏதாவது ஒரு வகையில் பெரியவர்களைச் சார்ந்து இருக்க வேண்டியுள்ளது. எனவே, குழந்தைகள் பாலியல் ரீதியான தாக்குதலுக்கு ஆட்படும் வாய்ப்பு கூடுதலாக இருக்கிறது. எவ்வாறாயினும் குழந்தைகள் ஆரோக்கியமான வளர்ச்சியைக் காண்பதற்கான சமூகச் சூழலை உருவாக்க வேண்டிய கடமை நமக்கு உண்டு.

குழந்தைகள் மீதான பாலியல் தாக்குதல்களில் பெரும்பாலான சம்பவங்கள் வெவ்வேறு காரணங்களால் புகார் செய்யப்படுவதில்லை. தாங்களும் உடன்பட்டதாகக் குற்றச்சாட்டு எழும் என்ற அச்சம் அவரது நண்பர்களோ பழிவாங்குவார்கள் என்ற அச்சம், குற்றவாளியாலோ அல்லது அவரது நண்பர்களோ பழிவாங்குவார்கள் என்ற அச்சம், காவல் துறை நடைமுறைகளைக் குறித்த அச்சம் ஆகியவையும் இதற்குக் காரணம்.

## குழந்தைகளைத் துன்புறுத்துவது குறித்த பொதுக்கருத்து:

குறிப்பிட்ட (குற்றவாளி) ஒருவரின் செயல் காரணமாக, வேறு (பாதிக்கப்பட்டவர்) ஒருவர் மனவருத்தம், தாழ்வுமனப்பான்மை, வஞ்சினம் கொள்வது, அல்லது அதிர்ச்சியடைவது என்பதே இழிவாக நடத்துவது என்பதாக வரையறுக்கப்பட்டுள்ளது. இழிவு என்பது வார்த்தையாகவோ, உளவியல்ரீதியாகவோ அல்லது உடலியல் ரீதியாகவோ இருக்கலாம்.

ஒரு குழந்தை இவ்வாறான பாலியல் தாக்குதலுக்கு ஆட்படும் போது பாதிக்கப்பட்ட நபர் என்ற முறையில் குழப்பமான சூழலுக்கு இரையாகி விடுகிறது. ஒரு குழந்தை (பாலியில் ரீதியாக பாதிக்கப்படும்) போது, அது முதலில் அச்சம், சினம், பகைமை, குற்றவுணர்வு, வெட்கம் ஆகியவற்றால் அலைக்கழிக்கப்படுகிறது. நாட்கள் செல்லச் செல்ல, மனச்சோர்வு காரணமாக தன்னைத்தானே காயப்படுத்திக்கொள்ளல் கவலை மற்றும் பதற்றத்திற்கு ஆளாகிவிடுகிறது. குழந்தை தனிமைப்பட்டு, மனசஞ்சலத்திற்கு உட்பட்டு அவளது எதிர்காலம் இருளடர்ந்து விடுகிறது.

உலகம் முழுவதும் குழந்தைகளின் நிலை கவலையளிக்கும் அளவுக்கு பின்னோக்கிச் சென்றதன் காரணமாக ஐ.நா.சபை குழந்தைகள் உரிமைக்கான மாநாடு ஒன்றை நடத்தியது. ஒவ்வொரு நாடும் தனது குழந்தைகள் நலனுக்காக முதலீடாகக் கருதி குறிப்பிட்ட தொகையைச் செலவு செய்தல் வேண்டும். பின்னர் அவர்கள் வளர்ந்து பொறுப்புள்ள குடிமக்களாக அவர்களது உழைப்பின் பலனை அறுவடை செய்யலாம். உலகம் முழுமையுள்ள குழந்தைகளின் முக்கியத்துவம் கருதி ஒவ்வோராண்டும் நவம்பர் 19 அன்று "குழந்தைகள் இழிவு படுத்தப்படுவதைத் தடுக்கும் நாளாக" உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

தற்போது குழந்தைகளைக் பாலியில் ரீதியான கொடுமைகள் மிக அதிகமாக நடைபெறுகிறது. சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, நாள்தோறும் இரண்டு குழந்தைகள் பாலியில் ரீதியாக துன்புறுத்தப்படுகின்றன. இந்தியாவில் 10–ல் ஒரு குழந்தை பாலியல் ரீதியாக சிதைக்கப் படுகிறது. ஆனால் உண்மையான நிகழ்வு இதைவிடக் கூடுதலாக இருக்கும். ஏனெனில் சமுதாயம் பாதிக்கப்பட்டவர் மீதே களங்கத்தைச் சுமத்துகிறது. பெரும்பாலான வழக்குகளில் குற்றவாளி பாதிக்கப்பட்ட குழந்தையினரின் குடும்பத்தின் நம்பிக்கைக்குரியவராக இருக்கிறார்.

## ஆய்வு முடிவுகள்:

யுனிசெஃப் (UNICEF) மற்றும், சேவத் சில்ட்ரன் (Save the children fund, UK) ஆகியவற்றின் உதவியோடு, மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் நடத்திய ஆய்வில் குழந்தைகள் பாலியல் ரீதியாக சீரழிக்கப்படுவது குறித்த விஷயங்கள் வெளிவந்துள்ளன. இந்த ஆய்வு ஆந்திரம், கேரளா, தில்லி, ராஜஸ்தான்,

மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்கம், குஜராத், மகாராஷ்ரா, கோவா, மிசோரம் மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் 12, 447 குழந்தைகளிடையே நடத்தப்பட்டது. இவர்களோடு 2324 வளர்இளம்பருவத்தினரும், அவர்களைச் சார்ந்த 2449 பேரும் அடங்குவர்.

## ஆய்வின் முக்கிய முடிவுகள் பின் வருமாறு :

- மூன்றில் இரண்டு குழந்தைகள்.
- இந்த 13 மாநிலங்களிலும் 50 சதவீதத்திற்கு அதிகமான குழந்தைகள் ஏதாவது ஒருவகையில் உடல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளனார். இவற்றில் 54.68 சதவீதம் ஆண் குழந்தைகள்.
- 88.6 சதவீதம் குழந்தைகள் பெற்றோரால் உடல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளனர்.
- 53.22 சதவீத குழந்தைகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வடிவங்களில் பாலியல் துன்புறுத்தல்களைச் சந்தித்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- 5.69 சதவீதம் பேர் பாலியல் ரீதியாக சிதைக்கப்பட்டுள்ளனர்.
- இரண்டில் ஒரு குழந்தை (ஆணோடு, பெண்குழந்தைகளும்) உளவியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்படி பள்ளி செல்லும் குழந்தைகளில் 65 சதவீதம் பேர் பள்ளிகளில் உடல் ரீதியான தண்டனைகளுக்கு ஆட்பட்டுள்ளனர். 50.2 சதவீதம் குழந்தைகள் தாங்கள் வாரத்தின் ஏழு நாட்களும் வேலைக்குச் செல்வதாகக் கூறுகின்றனர். இவர்களில் பள்ளி செல்வதாகப் பதிந்துள்ளோரும் அடங்குவர். 53 சதம் குழந்தைகள் வீட்டில் தமது குடும்பத்தாராலேயே இழிவு படுத்தப்படுவதாகக் கூறுகின்றனர். உளவியல் ரீதியான துன்புறுத்தல்களும் கூட முக்கியமானதுதான். 44.13 சதவீத குழந்தைகள் தாங்கள் தங்களது வீட்டில், பள்ளியில், பணியிடத்தில், தெருக்களில் இன்றும் சொல்வதா தங்களது பாதுகாப்புக்கென உருவாக்கப்பட்ட நிறுவனங்களில் கூட இழிவுபடுத்தப்பட்டதாக பதிவு செய்துள்ளார். இவர்களில் பெரும்பகுதியாக 70.57 சதவீத பெண் குழந்தைகள் தங்கள் குடும்பத்தில் ஆண் வாரிசுகளுக்கு ஆதரவான சூழல் இருப்பதோடு, தாம் உதாசீனப் படுத்தப்படுவதாகவும் புகார் செய்துள்ளனர்.

குழந்தைகளை இழிவுபடுத்தும் நிகழ்வுகளில் 50 சதவீத நிகழ்வுகள் குழந்தைக்கு நன்கு தெரிந்த, நம்பிக்கைக்குரிய, நபர்களாலேயே ஏற்படுவதால் பெரும்பாலான குழந்தைகள் எவரிடத்தும் இதனை புகாராக சொல்வதில்லை. மற்ற இரண்டு தரப்பாரைவிட பச்சிளம் குழந்தைகள் பிறர் தமக்கு விளைவித்த கொடுமை குறித்து பெற்றோருக்கு உடனடியாகத் தகவல் தெரிவித்துள்ளனர்.

குழந்தைகள் பாலியில் வன்முறை நிகழ்வுகளில் அஸ்ஸாம் மாநிலம் (86.26 சதவீதம்) முதலாவதாகவும், ஆந்திரப்பிரதேசம் (72.83 சதவீதம்) இரண்டாவதாகவும் உள்ளன. கேரளத்தில் இது 44 சதவீதம். பெங்களூரைச் சேர்ந்த தொண்டு நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வின் படி இந்தியாவின் பெரு நகரங்களில் உள்ள சிறுமிகளில் 80 சதவீதம் பேர் ஏதாவது ஒரு விதத்தில் பாலியல் துன்புறுத்தல்களைச் சந்தித்துள்ளனர். சுமார் 63 சதவீத மாணவியர் இது போன்ற அதிர்ச்சியூட்டும் சம்பவங்களைக் கடந்து வந்துள்ளனர்.

இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்கள் மிக அதிகம். சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனம் (ILO) சமீபத்தில் நடத்திய ஆய்வின்படி உலகம் முழுமையும் உள்ள 250 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்களில், 60 மில்லியன் இந்தியாவில் உள்ளனர். மாநிலத்திற்கு மாநிலம் எண்ணிக்கை வேறுபடலாம். இந்தியாவில் ஆந்திராவில் தான் மிக அதிகமான அளவாக 16.62 லட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர்.

## பிரதான காரணங்கள் :

பெற்றோரின் கல்லாமை காரணமாக குழந்தைத்திருமணம் போன்ற தீயமரபுகள் நீடிப்பதன்றி, பெருகவும் செய்கின்றன. சில நேரங்களில் மரபார்ந்த வழக்கம் அல்லது சாதீய முறை ஆகியவையும் கூட பெற்றோர் சிந்தனையில் செல்வாக்கு செலுத்துகின்றன. செலவைக் குறைப்பதற்காக பெற்றோர் தம் பெண் குழந்தைகளில் ஒன்றுக்கு மேற்பட்டோருக்கு ஒரே சமயத்தில் திருமண ஏற்பாடுகள் செய்யும் வழக்கமும் உள்ளது.

பாலியல் நடவடிக்கைகளில் ஒளிவுமறைவின்றி, வெளிப்படையாகச் செயல்படும் சமூகங்களில் கூட குழந்தைகளைக் பாலியில் ரீதியாக கொடுமைப் படுத்துவது நடைபெறுகிறது. ஆகவே, நமது

தேசத்தை விட அங்கே இது குறித்து வெளிப்படையாக அணுகித் தீர்க்க முயற்சிக்க இயல்கிறது. குழந்தைகள் பாலியில் ரீதியாக கொடுமைப் படுத்துவது என்பதைப் பொறுத்தவரை, இக்குற்றம் புரிபவன் எவ்வித ஒழுங்கு முறைகளுக்கும் உட்படாத, நேர்மை தவறிய ஒரு காட்டுமிராண்டியாவான். ஒரு சின்னஞ்சிறு குழந்தையை பாலியில் வன்முறைபடுத்துவதின் மூலம் தனது முறையற்ற காமவேட்கைக்கு வடிகால் தேடிக்கொள்கிறான். இந்த விசயத்தில் ஒருவரது அருவருப்பான காம இச்சையைத் தூண்டுகிற புத்தகங்களும், திரைப்படங்களும் எதிர்மறை காரணங்களாக இருக்கின்றன.

நமது தேசத்தில் இதுபோன்ற பிரச்சினைகளில் தீர்வுகாணுமளவுக்கு, கடுமையான சட்டங்களோ அல்லது திறமையான அரசு எந்திரமோ இல்லையென்று கூறப்படுகிறது.

## என்ன செய்ய வேண்டும் ?

குழந்தைகளுக்கு மிக இளம் வயதிலேயே உடலின் அந்தரங்க பாகங்கள் குறித்து விளக்குவதோடு, நல்ல தொடுகைக்கும், மோசமான தொடுகைக்கும் இடையேயான வேறுபாடுகளை அவர்கள் தெளிவாக அடையாளம் காண கற்பிக்கப்பட வேண்டும். குழந்தைகளை வேலைக்காரர்களுடனோ புதியவர்களுடனோ அல்லது வீட்டுக்கு வந்து கற்பிப்பவருடனோ தனியாக எப்போதும் விட்டுச் செல்லக் கூடாது.

இந்தப்பிரச்சினைகளைக் கையாள எளிதான, நெளிவு சுழிவான, நுண்மையான சட்டம் உருவாக்கப்படுவதன் மூலம் குற்ற நிகழ்வுகள் உடனடியாக பதிவு செய்யப்படவும், தீர்வுகாணப்படவும் இயலும். பாதிக்கப்பட்ட குழந்தைகளை எவ்வாறு மென்மையாக அணுகுவது என்பது சட்டத்தின் உள்ளடக்கமாக இருக்கவேண்டும்.

டாக்டர்.ஹரேந்திர டிசில்வா (தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம், இலங்கை) அவர்கள் சொல்கிறபடி, தேசத்தின் எல்லாத் துறைகளிலும் குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைக்கு முடிவுகாண்பது, அதோடு குழந்தை உரிமைகளை செயலாக்குவது குறித்த ஒருங்கிணைப்பு தேவை. சாதாரணமாக ஒரு சந்தேகம் எழுந்தால் கூட, அலட்சியப்படுத்தாமல் தீவிரமான விசாரணை செய்ய வேண்டும். மருத்துவர்கள் தங்களிடம் பரிசோதனைக்கு வரும் குழந்தைகளிடம் அவை குறிப்பிட்ட காயம் குறித்து எதுவும் சொல்லாவிட்டாலும் கூட குழந்தைகளின் பெண்குறியிலோ அல்லது அதன் அருகிலோ காயம், அல்லது உடலின் வெவ்வேறு இடங்களில் காயம் அல்லது சிராய்ப்பு போன்றவையோ சிகரெட்டால் சுட்ட அல்லது வேறு ஏதேனும் தீக்காயங்கள் உள்ளதா என கவனமுடன் ஆராய வேண்டும். குழந்தையின் நடத்தையும் உளவியல் ரீதியாக சரிபார்க்கப்பட வேண்டும்.

**இந்தப்பிரச்சினைகளைக் கையாள எளிதான, நெளிவு சுழிவான, நுண்மையான சட்டம் உருவாக்கப்படுவதன் மூலம் குற்ற நிகழ்வுகள் உடனடியாக பதிவு செய்யப்படவும், தீர்வுகாணப்படவும் இயலும்.**

குழந்தைகள் திருமண (தடுப்புச்) சட்டம் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும், குழந்தைத் திருமணம் தொடர்பான குற்றவாளிகளுக்கு நடைபெறும் வகையிலும் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும். அரசு சாரா அமைப்புகளையும், உள்ளாட்சி அமைப்புகளையும் குழந்தைத் திருமண தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது சிறந்த பயனளிக்கும். எல்லா திருமணங்களும் பதிவு செய்வது கட்டாயமாக்கப்படுமானால், குழந்தைத் திருமணங்கள் பதிவு செய்யப்படாது நிறுத்தப்பட்டு இறுதி முடிவு ஏற்படும்.

குழந்தைகளை பாலியில் வன்முறை நிகழ்வில், பாதிக்கப்பட்ட குழந்தையின் பாதுகாப்பு அரசின் பொறுப்பாகும். குழந்தையின் புனர்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். சமூக ஒற்றுமையும், குற்றங்கள் பகிரங்கப்படுத்தப்படும் என்ற அச்சமுமே குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தும், குழந்தை உரிமைகள் குறித்த பரவலான விழிப்புணர்வும், குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்ற உறுதியும் சமூகத்தின் பொறுப்பாகும்.

**– Social Welfare November -**

# குழந்தைத் திருமணத்தைத் தடுத்து நிறுத்துவோம்!

**குழந்தைத் திருமணத்தைத் தடை செய்யும் சட்டம் அமலாக்கப்பட்டு எட்டு தலைமுறைகள் கடந்த பின்னரும், அவை சர்வசாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குழந்தைத் திருமணத்தைத் தடைசெய்யும் சட்டம் இந்தியாவில் 1929 முதலே அமலாக்கத்தில் இருந்து வருகிறது. அச்சட்டம் 1949 மற்றும் 1978ல் திருத்தப்பட்டது. இப்போது குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006 நிறைவேற்றப்பட்டுள்ளது. இன்றைய நாள் வரையிலும் அத்தகைய திருமணங்கள் எல்லா இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இதற்கு மரபார்ந்த கலாச்சார வழக்கு முறைதான் காரணம் என வெறுமனே கூறிவிட இயலாது. 10வது ஐந்தாண்டு திட்டம் (2002 –07) குறித்த இடைக்கால மதிப்பீட்டு அறிக்கை "புதிய சிக்கலான காரணங்கள்" தோன்றியுள்ளது குறித்து சுட்டிக்காட்டுகிறது. ஆனால் இப்பிரச்சினை குறித்த சமீபத்திய ஆய்வு கூறுவது என்ன ?**

அனிதா ராஜிடேல் அவர்கள் மேற்கொண்ட "இந்தியாவில் பெருகிவரும் குழந்தைத் திருமணம், இதனால் இளம் மகளிரின் மகப்பேறுவளம், மகப்பேறு விளைவுகள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பாதிப்பு என்ற புதிய ஆய்வில் (தி லான்செட், 2009 மார்ச் 10) தேசிய குடும்ப நல ஆய்வு 3 ஐ (NFH 3) மேற்கோளாகக் கொண்டு 20 முதல் 24 வயதுள்ள பெண்களில் 44.5 சதவீதம் பெண்கள் 18 வயது நிறைவு பெறுவதற்கு முன்பே திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளனர். 22.6 சதவீதம் பெண்கள் 16 வயதைத் தொடுவதற்குமுன்பே திருமணம் நடந்துள்ளது. 2.6 சதவீதம் பெண்குழந்தைகளுக்கு 13 வயது முடிவதற்குள்ளே திருமணம் நடைபெற்றுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதோடு, குழந்தைத் திருமணத்தின் தொடர்விளைவுகளாக உயர்ந்த பட்சக் குழந்தைப் பிறப்பு, முதல் குழந்தைப்பிறப்புக்கு முன்னர் எவ்விதமான கர்ப்பத்தடை உத்திகளையும் பயன்படுத்தாதது, 24 மாதங்களுக்குள்ளாகவே அடுத்த குழந்தையின் பிறப்பு, எண்ணிக்கையிலடங்காத அளவுக்கு வேண்டாத மகப்பேறுகள், கருக்கலைப்பு, பெண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சைகள் ஆகியவை உடன் வருகின்றன.

இந்த ஆய்வு முடிவுகள்". "மற்ற வளரும் நாடுகள் பெரும்பாலானவற்றில் நடைமுறையில் உள்ளது போல இந்தியாவில், எங்கும் பரவலாக நிகழ்ந்து வரும் குழந்தைத் திருமணத்தின் எண்ணிக்கையைக் குறையச் செய்வதை உற்சாகப் படுத்தும் அளவுக்கு பொருளாதாரம் மற்றும் பெண்கள் முன்னேற்றத்தில் சமீபகால முன்னேற்றமோ அல்லது குழந்தைத் திருமணத்தைத் தடுத்து நிறுத்தவும், மகப்பேறு மற்றும் குழந்தை நல வளர்ச்சியில் அக்கறை செலுத்துகிற கொள்கையோ அல்லது திட்டமிட்ட செயல்முறையோ இல்லை" எனக் கூறுகின்றன.

இவை 48.4 சதவீத பெண்கள் குழந்தையாயிருக்கும் போதே திருமணம் செய்து வைக்கப்பட்டு, அவர்கள் 18 வயது நிறைவடைவதற்கு முன்னரே குழந்தை பெற்றுக் கொள்வதும், எவ்வாறு பெண்கள் இளம் தளிர்களாக இருக்கும் போதே வேரறுக்கப்பட்டு, சமூகத்தால் அவக்கேடாகவும், பாகுபாடாகவும் நடத்தப்படுகிறார்கள் என்ற உண்மையை சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது. மேலும் ஒருவர் இத்தகைய பச்சிளம் பெண்குழந்தைகள் மணமகளாக, மருமகளாக (குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ) முடிவெடுப்பதில் எவ்வித அதிகாரமும் அற்ற, அல்லது குறைந்த அளவே அதிகாரம் கொண்ட குடும்ப அளவிலான மற்றும் பாலியல் வன்முறைக்கு எப்போதும் பலியாகிற அபாயகரமான சூழலில் அல்லல்படுகிற குழந்தைத் தொழிலாளர்களாக வீட்டிலும் வயல் வெளிகளிலும் பாடுபட்டாக வேண்டிய அவலநிலையில் எவ்வாறு சிக்கிக் கொள்கிறார்கள் என்பதை தாமே யூகித்துத் கொள்ளலாம். அதுவன்றி, குழந்தைத் திருமணத்தால் உருவாக்கப்படுகிற சமூகச் சூழல் காரணமாக, இக்குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த பின்னரும் கூட குழந்தைப் பேறு சம்பந்தமாக அவர்களது சுயவிருப்பம் கட்டுப்படுத்தப்படுகிறது.

குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 1929ல் திருமண வயது 12 என வரையறுக்கப்பட்டு, பின்னர் 1978ல் 18 ஆக உயர்த்தப்பட்டது. ஆனால் 2005–06ல் நாடுமுழுமையிலும் உள்ள 20 முதல் 24 வயது வரையுள்ள பெண்களில் ஏறத்தாழ சரிபாதி பேருக்கு சட்டப்படியான 18 வயது நிறைவடைவதற்கு முன்பே திருமணம் நிகழ்ந்துள்ளது. இத்தகைய கிராமப்புறப்பகுதிகளைச் சேர்ந்த, வறிய, முழுமையான கல்வி மறுக்கப்பட்ட சிறுமிகளான இவர்களில் நாட்டின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இத்தகைய குழந்தைத்திருமண நடைமுறைகளுக்கு எளிதில் பலியாகிறவர்களாக நலிந்த நிலையில் இருப்பது சர்வசாதாரணமாக நடைமுறையில் உள்ள குழந்தைத்திருமணத்தை எதிர்கொள்ளும் அளவுக்கு வலிமையற்றுப் போய்விட்ட இன்றைய சூழல் குழந்தைத் திருமணம் குறித்த பொதுக்கொள்கை தோல்வியடைந்துள்ளதையே சுட்டிக்காட்டுவதாயிருக்கிறது. திட்டக்குழு கூறியுள்ள புதிய சிக்கலான காரணங்கள் குறித்த பட்டியல் “ சிறுமிகளுக்குப் பாதுகாப்பின்மை மற்றும் அவர்களுக்கெதிரான வன்முறை பெருகுவது, பாலியல் ரீதியான புறக்கணிப்பு மற்றும் அலட்சியம் காரணமாக வளர்இளம் பருவத்திலேயே கருவுறுதல் வளர்ந்துவருவது, பல்வேறு காரணங்களால் ஆரம்பக்கல்விக்குப் பிறகான கல்வி பெற இயலாமல் இடைநிற்கும் போக்கு பெருகிவருவது, விளையாட்டு, ஆரோக்கியமான பொழுதுபோக்கு, படிப்பதற்கான வசதிகள் மறுக்கப்படுவது” என நீள்கிறது. பெண்கருக்கொலை எனும்போது, பெண் குழந்தையின் சமூக அந்தஸ்துடன் குழந்தைத் திருமணநிகழ்வும் கூட ஆழமான தொடர்பைப் பெற்றுள்ளது. மேலும் பெண் குழந்தையின் பொருளாதார மதிப்பீடு குறித்த அலட்சியமான பார்வையும் இதனோடு இணைந்தே உள்ளது. உண்மையில் பெண்குழந்தை சமூக–பொருளாதார ரீதியான ஒரு சுமையாகவே கருதப்படுகிறாள். எனவே அவளது கல்வி மற்றும் ஆரோக்கியத்திற்கென அதிகமாக எந்த செலவும் செய்யாமல் எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக அவளைத்திருமணம் முடித்து அனுப்பி விடுவதே சிறந்தது எனக் கருதப்படுகிறது. எவ்வளவு துரிதமாகத் திருமணம் முடிகிறதோ அந்த அளவு வரதட்சனையும் குறைகிறது. பிற ஆண்களது தொல்லையிலிருந்து தமது மகளைக்காக்க தமது மகளை அவளது கணவனின் பாதுகாப்பில் ஒப்படைப்பதோடு பெற்றோரின் மனக்கவலையும் முடிவுக்கு வருகிறது.

இப்போது செய்ய வேண்டியது தான் என்ன? குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் 2006 –ன் படி பாதிக்கப்பட்ட சிறுவயது மணமகள் மற்றும் சிறுவயது மணமகன் ஆகியோர் தமது திருமணத்தைச் செல்லாது என அறிவிக்கச் செய்ய இயலும். அவளுக்கு மறுமணம் நடைபெறும் காலம் வரையிலும் அவளது பராமரிப்புக்கான பாதுகாப்புப்பெற உரிமையுண்டு. இதுபோன்ற குழந்தைத் திருமணங்களுக்கு ஏற்பாடு செய்வோர், நடத்திவைப்போருக்கான தண்டனை அதிகரிக்கப்பட்டுள்ளது. மிகச் சமீபத்தில் (டிசம்பர் 2007ல் உச்ச நீதிமன்றத்தில்) சமர்ப்பிக்கப்பட்ட இந்திய சட்ட ஆணையத்தின் 205வது அறிக்கை 16 வயதுக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு நிகழ்ந்த குழந்தைத் திருமணம் செல்லத்தகாதது எனப் பரிந்துரை செய்துள்ளது. அதோடு, அவளது மறுமணம் வரையில் அவளது பராமரிப்பு தொடர வேண்டும். குழந்தைகள், ஏதேனும் இருப்பின் அவை சட்டரீதியானவையாகவே கருதப்படும். பாலியல் உறவுக்கான சம்மதம் அளிக்கும் வயது 16 ஆக உயர்த்துதல். மேலும் எல்லா திருமணங்களும் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற விதியும் உருவாக்கப்பட்டுள்ளது. இவையன்றி, குழந்தைத்திருமணத்தடைச் சட்டத்தை சிறந்த முறையில் அமலாக்கம் செய்வதை உறுதிப்படுத்திட செயலாக்க நடைமுறைகளை எவ்வாறு செழுமைப்படுத்துவது என்பது பற்றி மென்மேலும் ஆய்வு செய்தல் வேண்டும்.

ஆனால், சட்ட வழிமுறைகளோடு கூடவே, சமூக அடிப்படையிலான திட்டங்களுக்கும், செயல்முறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியது மிக அவசியமாகும். குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் அபாயம், பெண்குழந்தையின் திருமணத்தைத் தள்ளிப்போடும் இடைக்கால அவகாசத்தில் அவர்களுக்குக் கல்வி அறிவூட்டுவதால் ஏற்படும் பயன்கள் ஆகியவற்றை முதலில் பெண்குழந்தையின் பெற்றோர், சமுதாயப் பெரியோர், மதச்சான்றோர் ஆகியோர் நன்கு உணரச் செய்திட வேண்டியதே இன்றுள்ள முதற்கடமையாகும்.

**– Economic & Political Weekly, 2009**

# ருமேனியக் குழந்தைகளின் துயரம்

– டான் பைலெஃப்ஸ்கி

**சமீபத்திய ஆய்வின்படி ஏறத்தாழ 1,70,000 ருமேனியக் குழந்தைகளின் பெற்றோரில் ஒருவர் அல்லது இருவருமே அயல் நாடுகளில் பணி செய்கிறார்கள்.**

இலட்சக்கணக்கான ருமேனியர்களின் பொருளாதார உயிர் நாடி அயல் நாடுகளுக்குச் சென்று பணி செய்வதைச் சார்ந்தே அமைகிறது. ஆனால் 12 வயது ஸ்டீபன் கியூரேவைப் பொறுத்தவரை அவனது தாயார் அவனைப் பிரிந்து வீட்டு வேலை செய்வதற்காக இத்தாலிக்குச் சென்றது மரணத்தைவிட மோசமான கேடு விளைவித்து விட்டது. அவன் குதிரைச் சவுக்கை செர்ரி மரத்தில் பிணைத்து தூக்கிட்டு மரணமடைந்து விட்டான். ஸ்டீபன் மிக அமைதியான இயல்புள்ளவன், மிகச்சிறிய ஒடுங்கிய உருவம் கொண்ட ஸ்டீபனுக்கு அயல் நாட்டு நாணயங்களைச் சேகரிப்பதும், பயனற்று எறியப்படும் உலோகப் பொருட்களினால் விளையாட்டுக் கத்திகள் செய்வதும் மிகப்பிடித்தமான பொழுது போக்கு, தூக்கிட்டு இறந்து போகுமுன் ஸ்டீபன் கைப்பேசியால் தன்னைத்தானே கடைசியாகப் படம் பிடித்துள்ளான்.

அந்தப் படத்தில் அவன் மார்பில் ஒரு துண்டுச்சீட்டைப் பிணைத்து வைத்துள்ளது தெரிகிறது. “துயர் மிகுந்த நமது பிரிவுக்காக நான் வருந்துகிறேன்” தன்னைத் தனியே விட்டு அயல்நாடு செல்லும் தாயாரைத் தடுத்து நிறுத்துவதில் தோல்வியடைந்த ஸ்டீபன் தன் தாயார் அலெக்ஸான்டிரினாவுக்கு விட்டுச் சென்ற கடைசிச் செய்தி இதுதான். ருமேனிய உழைக்கும் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பெருவெள்ளமாகப் புறப்பட்டு அயல் நாடுகளுக்குச் சென்று பாடுபடுகின்றனர். “நீங்கள் எனது இறுதிச் சடங்கு செலவு குறித்து கவலைப்பட வேண்டியதில்லை. நம் வீட்டிலிருந்து எடுத்துச் சென்ற மரங்களுக்காக நமக்கு ஒருவர் பணம் தர வேண்டியிருக்கிறது. எனது சகோதரியே, நீ நன்றாகப் படிக்க வேண்டும். அம்மா, நீ உன்னை கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், இந்த உலகம் மிக மோசமானது. என்னுடைய ’பப்பியை’ நன்றாகப் பார்த்துக் கொள்ளவும்” இதுவும் அந்தத் துண்டுச்சீட்டில் எழுதி இருந்தது.

இது நிகழ்ந்து இப்போது இரண்டாண்டுகளாகிவிட்டது. 38 வயது அலெக்ஸான்டிரினாவுக்குக் கணவர் இல்லை. மூன்று குழந்தைகளின் தாயான அலெக்ஸான்டிரினா ஒற்றை ஆளாகத் தன் 5 குழந்தைகளைக் காப்பாற்ற அயல் நாடு சென்றார். ரோம் நகரில் அவர் துப்புரவுப் பணி செய்கிறார். அவரைப் போலவே கடந்த 5 ஆண்டுகளில் முப்பது இலட்சம் ருமேனியர்கள் வேலை வாய்ப்புக்காக மேற்கு நாடுகளை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்டீபன் மரணத்திற்குப் பின்னர் அவர் தனது மற்ற இரண்டு இளம் குழந்தைகளைத் தனியே விட்டுச் செல்ல வேண்டுமே என்ற தயக்கத்தால் ஓராண்டு கழிந்து விட்டது. ஆனால் இறுதியில் என்ன ஆனது ? ருமேனியாவில் வேலை வாய்ப்பில்லை. அதோடு, ருமேனியாவை விட ரோம் நகரில் மூன்று மடங்கு, அதாவது மாதமொன்றுக்கு 770 டாலர் வருவாயீட்ட வாய்ப்புள்ள நிலையில், அங்கு செல்வதைத்தவிர வேறு வழி இல்லை. ரோம் நகரில் உள்ள அவரோடு தொலைபேசியில் உரையாடிய போது “ஸ்டீபன் மரணம் என் வாழ்நாளிலேயே மிகப் பெரிய துயரம். ஆனால் என்னைச் சூழ்ந்துள்ள வறுமையில் என் குழந்தைகளுக்கு உணவு வேண்டுமானால் நான் அவர்களைப் பிரியத்தான் வேண்டியிருக்கிறது” என்கிறார்.

இரண்டு கோடியே இருபது இலட்சம் மக்கள் தொகை கொண்ட, பால்கன் வளைகுடா நாடான ருமேனியாவின் அடக்குமுறை ஆட்சிக்காலத்தில் ருமேனியாவிலிருந்து தப்பிச் செல்வது ஒன்றே குடிமக்களின் கனவாக இருந்தது. 1989ல் ருமேனியாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி வீழ்ந்தவுடன் துவங்கிய ஏராளமான புலப்பெயர்வுகள், இரண்டாண்டுகளுக்கு முன்பு ருமேனியா ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்ததும் மிகத்தீவிரமடைந்துள்ளது. ஸ்பெயின், இத்தாலி உள்ளிட்ட சில நாடுகள் கிழக்கு நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து வரும் தொழிலாளர்களை ஈர்ப்பதற்காக தமது நாட்டு குடியேற்ற விதிகளை எளிமையாக்கி இருக்கின்றன. வளம் பொருந்திய அண்டை நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் செய்ய விரும்பாத, ஸ்ட்ரா பெர்ரி பழத்தோட்ட வேலை, கட்டுமான வேலை, வீட்டு வேலை போன்றவற்றை கடும் உழைப்பாளிகளான ருமேனியர்கள் செய்கிறார்கள். இவ்வாறு வேலைக்காக வேறிடம் செல்வது தேசத்திற்கான வருவாய் வாய்ப்பாக இருந்தாலும் கூட, அதுவே சொந்த தேசத்தின் மீது வேறு வகைகளில் பாதிப்பை உருவாக்கக் கூடியதாக இருக்கிறது. அயல்நாடு சென்றுள்ள ருமேனியத்

தொழிலாளர்கள் கடந்த ஆண்டு மட்டும் 10.3 பில்லியன் டாலர்களை தமது நாட்டுக்கு அனுப்பியுள்ளனர்.

## ஸ்ட்ராபெர்ரி அனாதைகள்:

தொடர்சியான புலப்பெயர்வுகள் ருமேனியாவின் சமூக ஒருங்கிசைவையே சீர்குலைத்துள்ளன. இதனை சமூக ஆய்வாளர்கள் "ஸ்ட்ரா பெர்ரி அனாதைகள்" என அழைக்கின்றனர். சோரஸ் ஃபவுன்டேஷன் சமீபத்தில் நடத்திய ஆய்வின்படி சுமார் 1,70,000 குழந்தைகளின் பெற்றோரில் ஒருவர் அல்லது இருவருமே அயல் நாடு சென்று பணி புரிகின்றனர். இவ்வகையான குழந்தைகள் புகைபிடிப்பது, மது அருந்துவது போன்ற பழக்கங்களுக்கு ஆட்பட்டிருப்பதோடு, காவலர்களோடு தகராறு செய்வது, பள்ளிகளில் ஒழுங்கின்மை ஆகிய பிரச்சினைகளோடு உள்ளனர். ஆனால் இதற்கு மாறாக தங்கள் பெற்றோர் தம்மை விட்டுப் பிரிந்து சென்றதற்குத் தாமே காரணம் என்பதான மனக்குழப்பத்திலாழ்ந்துள்ளனர்.

புலம் பெயர்ந்த பெற்றோரின் குழந்தைகளிடையே பணியாற்றும் டெனிஸா இயானெஸ்கு என்ற உளவியல் வல்லுனர், "இக்குழந்தைகள் மனச்சோர்வு நோயினால் பாதிக்கப்படும வாய்ப்பு கூடுதலாகவுள்ளது. குறிப்பாக, குழந்தைகளை விட்டுச் செல்பவர் தாயாக இருக்கும் வேளையில் குழந்தைகள் தாம் யாருமற்ற அனாதைகளாக கைவிடப்பட்டு விட்டதாக உணர்கின்றனர். ருமேனியாவில் குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் பொறுப்பு தாயாரைச் சார்ந்ததே. எனவே, தாயாரைப் பிரிந்த குழந்தைகள் எல்லாவற்றையுமே இழந்து விட்டதாகக் கருதுகின்றன என்கிறார் இயானெஸ்கு.

சோரஸ்ஃபவுன்டேஷன் ஆய்வின்படி தனியே விட்டுச் செல்லப்பட்ட குழந்தைகளில் 14 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது கடந்த 3 ஆண்டுகளில் மட்டுமே. ஸ்டீபன் தற்கொலையைத் தவிர, பிற குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டதற்கு அவர்களது பெற்றோரின் பிரிவு எந்த அளவுக்குக் காரணமாக இருந்தது என்பது பற்றிய தெளிவில்லை. ருமேனியாவின் பொதுவான குழந்தைகள் மரண வீதத்தை விட இது அதிகமா அல்லது குறைவா என்பதும் தெளிவாக விளங்கவில்லை.

ருமேனியாவின் பெரும்பகுதி கிராமப்புறங்களாகவே இருப்பதால், நெருக்கமான குடும்பப்பிணைப்புகளே வாழ்வின் எல்லா அம்சங்களையும் தீர்மானிக்கிற அடிப்படைக் கூறாக இருக்கிறது. இதனால், குடும்ப உறுப்பினர்கள் புலம் பெயர்ந்து செல்வதால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு மிகத் தீவிரமாக இருக்கிறது. மேலும், ஏற்கனவே ஒழுங்கமைவு இல்லாத குடும்பங்கள் புலப்பெயர்வு காரணமாக முழுவதுமாகச் சிதைந்து விடுகின்றன என உளவியல் வல்லுனர்கள் கூறுகின்றனர்.

## நொறுங்கும் குடும்பங்கள்:

சோரஸ் ஃபவுன்டேஷனின் ஆய்வு நடிவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் மிகேலா ஸ்டீஃபென்ஸ்கு "நாட்டுக்குள் வந்து குவிகிற பில்லியன் கணக்கான பணம் அலெக்ஸான்ட்ரினா போன்ற தாய்மார்களுக்கு தமது குடும்பத்தின் வறுமையைத் துடைத்தெறிய உதவுகிறது. ஆனால் அதே வேளையில் புலப்பெயர்ச்சி காரணமாக மரபார்ந்த ருமேனியக் குடும்பங்களின் உள்கட்டமைப்பு பெரும் மாறுதல்களைச் சந்தித்தாக வேண்டியிருக்கிறது" என்கிறார்.

புலம் பெயர்ந்த பெற்றோரின் குழந்தைகளில் ஏராளமானவர்கள் தமது தாத்தா மற்றும் பாட்டிகளின் கவனிப்பில் விடப்படுகிறார்கள். இந்த முதியோரால் வளரும் குழந்தைகளின் தேவைகளைச் சரிவரப்புரிந்து கொண்டு அவற்றுக்கு ஈடுகொடுக்க இயலுவதில்லை. புலம் பெயர்ந்த தாயும், தந்தையும் வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று பணி செய்யும் சூழ்நிலையில், விவாகரத்துக்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே செல்கிறது. சில சமயங்களில் குழந்தைகள் முழுவதுமாகக் கைவிடப்படுவதோ அல்லது அனாதை இல்லங்களில் சேர்க்கப்படுவதோ நிகழ்கிறது என குழந்தைகளிடையே பணியாற்றும் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

எம்மி விருது பெற்ற "இந்த நேரம் உங்கள் குழந்தை என்ன செய்து கொண்டிருக்கிறது என்று யூகிக்க முடியுமா?" என்ற ஆவணப் படம் தேசியத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. அதில் "ஒரு தாய் தனது ஆறு குழந்தைகளையும், குருட்டுக் கணவரையும் விட்டு வீட்டு வேலை செய்ய ஜெர்மனிக்குப் போகிறாள். அங்கே அவள் வேறு ஒருவரோடு இணைந்து கொள்கிறாள். திரும்ப வரவேயில்லை. இதன் விளைவாக அவளது குழந்தைகள் தமது படிப்பைத்துறந்து வேலைக்குச் செல்ல நேரிடுகிறது. வாழ்க்கை நடத்த வேறு வழியில்லை".

"தமது குழந்தைகளின் மனச் சோர்வை அகற்ற முயற்சிப்பதில் புலம் பெயர்ந்த பெற்றோர் அக்கறை கொள்வதில்லை. குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகக் குழந்தைகளைப் பிரிந்து

செல்லவேண்டுமே என்கிற அவமானத்தையும், குற்றவுணர்வையும் சமாளிப்பதற்காக அவர்கள் அதீதமாக செலவிடுவதோடு, அளவற்ற களியாட்டத்திலும் ஈடுபடுகின்றனர்''. என்கிறார் ஸ்டீஃபெனஸ்கு.

## பணக்குவியலால் பலன் உண்டா ?

வெளிநாடுகளுக்குச் சென்று வேலை செய்வதால் வரும் வருவாய் குறுகிய காலமே நீடிக்கும், ஏனெனில் உலகம் முழுவதும் பரவி வருகிற பொருளாதார நெருக்கடியில் அயல் நாடுகளில் வேலை வாய்ப்பு அருகி ஏராளமானவர்கள் தமது சொந்த நாட்டுக்குத் திரும்ப வேண்டிய நிலை ஏற்படும் எனப் பொருளாதார வல்லுனர்கள் எச்சரிக்கின்றனர். ருமேனியர்கள் பெருவாரியாக அயல் நாடுகளுக்குச் செல்வதால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க ருமேனியத் தொழில் நிறுவனங்கள் துருக்கி, சைனா மற்றும் இந்தியாவிலிருந்து கட்டுமான, விவசாய, நெசவுத் தொழிலாளர்களை இறக்குமதி செய்கின்றன.

ஸ்பெயின் மற்றும் இத்தாலியில் பணி செய்த ஆயிரக்கணக்கான ருமேனியர்கள் ஏற்கனவே தமது வேலையை இழந்து விட்டனர். இந்த எண்ணிக்கைமேலும் கூடுதலாகி, வேலையற்ற பெரும் தொழிலாளர் படை நாடு திரும்ப விருப்பதால், ஏற்கனவே தள்ளாடுகிற ருமேனியப் பொருளாதாரம் முழுமையாக நொறுங்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. "புலப்பெயர்வு காரணமாக வந்து குவிந்துள்ள குறுகியகால பொருளாதாரப் பயன்கள் நீண்டகாலப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவ்வகையிலும் உதவிகரமாக இருக்காது. சுருக்கமாகச் சொல்வதானால் புலப் பெயர்வு என்பதே ஒரு தேசிய துன்பியல் நாடகமாகும்'' என்கிறார் மூத்த பொருளாதார அறிஞரான ராடு சோவியானி (New York Times News Service)

**- Hindu 16.2.2009**

## ரூ. 300 கோடியில் 6000 மாதிரிப்பள்ளிகள்

ஊராட்சி ஒன்றிய அளவில் புதிதாக 6 ஆயிரம் மாதிரிப் பள்ளிகளை அமைக்க ரூ. 312 கோடி இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டுக்கான (2009–10) இடைக்கால பட்ஜெட்டை அமைச்சர் பிரணாப்முகர்ஜி நாடாளுமன்றத்தில் திங்கள்கிழமை தாக்கல் செய்து இந்த அறிவிப்பை வெளியிட்டார். ஊராட்சி ஒன்றியத்துக்கு ஒரு பள்ளி என்ற அடிப்படையில் நாடு முழுவதும் 6 ஆயிரம் மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் ஏற்கெனவே கூறியிருந்தார். தற்போது இடைக்கால பட்ஜெட்டில் அதற்கான நிதி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளது. கல்விக்கு மொத்தம் ரூ.41 ஆயிரத்து 978 கோடி ஒதுக்ககப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட ரூ.4611.64 கோடி அதிகம். பள்ளிக்கல்விக்கு மட்டும் மொத்தம் ரூ.28 ஆயிரத்து 799 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. உயர் கல்விக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 13 ஆயிரத்து 179 கோடி.

மதரசா பள்ளிகளில் தரமான கல்வி அளிக்க ரூ.45 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அது போல் சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 4.5. கோடி. அனைவருக்கும் ஆரம்பக்கல்வி திட்டத்தைத் தொடர்ந்து இடைநிலைக் கல்வியை ஊக்குவிக்க தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத் திட்டத்துக்கு ரூ.1143 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி திட்டம் வெற்றி அடைந்ததால் அதைத் தொடர்ந்து தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. உயர் கல்விப்பிரிவில் பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு இடைக்கால பட்ஜெட்டில் கூடுதலாக ரூ.1062.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ரூ.6545 கோடி. 11–வது திட்ட காலத்தல் உயர் கல்விக்கான ஒதுக்கீடு 9 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார். ஏற்கெனவே 15 மத்திய பல்கலைக்கழகங்களை அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. 6 புதிய ஐஐடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 2 ஐஐடிகள் மத்தியப் பிரதேசம் மற்றும் இமாசலப் பிரதேசத்தில் அமைக்கப்படும் என்றார் அவர்.

**– தினமணி, 17.02.2009**

# பஞ்சாப் குழந்தைகள் உடலில் யுரேனிய நச்சுத் தாக்கம்

– சேவி சௌம்யா மிஸ்ரா

அவர்கள் மொத்தம் 149பேர். பெரும்பாலோர் 13 வயதுக்குட்ட குழந்தைகள். சில பெரியவர்களும் உண்டு. அவர்கள் செயல்பாட்டுக்கோளாறு, இரத்த நாளங்கள் பாதிப்பு மற்றும் உளவியல் கோளாறுகளுக்காக சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்தச் சிகிச்சை பஞ்சாப் மாநிலத்தின் ஃபரீத்கோட் மாநகரின் பாபாஃபரீத் சிறப்பு குழந்தைகளுக்கான மையத்தில் செய்யப்படுகிறது. அவர்களில் பெரும்பாலானவர்கள் பஞ்சாபைச் சார்ந்தவர்களாக இருப்பினும் கூட, தமிழகம், மேற்குவங்கம் இன்னும் அயல் நாடுகளைச் சேர்ந்தவர்களும் கூட அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்கள். இப்போது அனைவரது கவனமும் அந்தக் குழந்தைகள் மீது குவிந்துள்ளது. ஏனெனில் அவர்களது உடலில் யுரேனியப் படிமங்கள் சேர்ந்துள்ள விவரம் இப்போது தான் வெளிப்பட்டுள்ளது.

இது கண்டுபிடிக்கப்பட்டதே ஒரு தற்செயல் நிகழ்வுதான். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த காரின் ஸ்மித் என்ற நச்சு இயல் ஆய்வாளர் கடந்த ஆண்டு ஃபரீத்மையத்திற்கு வருகை புரிந்தார். ஏராளமானவர்களுக்கு உடலியல் வளர்ச்சியில் கோளாறுகள் ஏற்படுவதை அறிந்த அவர் அதற்கான காரணத்தைக் கண்டறிய விழைந்தார்.

அவர் அந்த மையத்தில் சிகிச்சை பெறும் குழந்தைகள், பெரியவர்கள் உள்ளிட்ட மொத்தமுள்ள 149 பேரின் தலை மயிர் மாதிரிகளை ஜெர்மனியிலுள்ள ஒரு ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பிவைத்தார். அந்த மாதிரிகளை ஆய்வுசெய்ததில் தகரம், ஈயம், அலுமினியம், மாங்கனீஸ் மற்றும் இரும்பு ஆகியவற்றின் படிமங்கள் அந்தத் தலைமயிர் மாதிரிகளில் இருந்ததாகக் கண்டறியப்பட்டது. காரின் ஸ்மித் வியப் படையவில்லை. நச்சுப் பொருட்களின் தன்மை, அவற்றின் விளைவுகளை ஆய்வு செய்யும் ஒரு மருத்துவர் என்ற முறையில் அவர் மாதிரிகளை ஆய்வுக்கு அனுப்புவதற்கு முன்னமேயே இத்தகைய உலோகங்கள் தம்மால் அனுப்பப்பட்ட மாதிரிகளில் இருக்கும் என்றே எதிர்ப்பார்த்திருந்தார். ஆனால் அந்த மாதிரிகளில் யுரேனிய நச்சுப்படிமங்கள் இருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. இதுவரையில் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட மாதிரிகளில் இத்தகைய யுரேனியச் சேர்மப்படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

“நாங்கள் யுரேனியம் வெளிப்படுமெனக் கருதி ஆய்வு நடத்தவில்லை. கன உலோக நச்சுத்தாக்குதல் குறித்து நடந்த ஆய்வின் போது இத்தகைய யுரேனியப் படிமங்கள் இருக்கும் விவரம் வெளியானது. இப்போது அக்குழந்தைகள் உடலில் எந்த அளவுக்கு யுரேனியப் படிமங்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பது பற்றி ஆய்வு செய்ய வேண்டும்”. என்றார் ஸ்மித் இப்போது குழந்தைகளின் உடலில் படிந்துள்ள யுரேனியத்தின் அளவே அவர்களை நோயில் வீழ்த்தப் போதுமானது என ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

“நான் அனுப்பிய மாதிரிகளில் யுரேனியப் படிமங்கள் இருப்பதை அறிந்து அளவற்ற வருத்தமடைந்தேன். எனது குழந்தைகளுக்கு என்ன ஆகும் என்றே எனக்குத் தெரியவில்லை” என்கிறார் தனது ஏழு வயது மகன் யுவராஜை இரத்தநாளக் கோளாறு சிகிச்சைக்காக இங்கே சேர்த்துள்ள தேவீந்தர் சிங்.

காரின் ஸ்மித் கடந்த மார்ச் மாத இறுதியில் மேலும் கூடுதலான மாதிரிகளைச் சேகரிக்க ஃபரீத் கோட் மாநகருக்கு வந்திருந்தார். குழந்தைகளின் உடலின் சேர்ந்துள்ள யுரேனியம் உள்ளிட்ட கன உலோகங்களை வெளிக் கொணரக்கூடிய மருந்துகளைப் புகட்டுவதற்கு முன்னும் அதன் பின்னரும் அவர்களது சிறுநீர் மாதிரிகளைச் சேகரித்தார். இவற்றை ஆய்வு செய்தால் குழந்தைகளின் உடலில் எவ்வளவு யுரேனியம் படிந்துள்ளது எனத் தெரிந்து விடும் என்றார் ஸ்மித். இந்த ஆய்வு முடிவுகள் ஜூன் மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

“செயல்பாட்டுக் கோளாறு நோய்க்கு யுரேனியம் தான் காரணமா என்பது குறித்து இனி ஆய்வு செய்ய வேண்டும்” என்கிறார் இம்மையத்தில் உள்ள இயற்கை வைத்தியர் ஹரீஷ்பாபு. இந்த மையத்தில் இயற்கை வைத்தியம், நரம்புச் சிகிச்சை மற்றும் யோகா ஆகியவற்றின் மூலம் சிகிச்சையளிக்கப் படுகிறது.

தென்னாப்பிரிக்காவில் பிறந்த ஸ்மித் தனது மையத்தில் 8 ஆண்டுகளுக்கு முன்பு சிகிச்சைக்காக வந்த அங்கித் சர்மா என்ற செயல்பாட்டுக் கோளாறு நோய்க்காக வந்த குழந்தையின் மூலம் ஃபரீத் கோட் மையம் குறித்து கேள்விப்பட்டார். அப்போது அங்கித் சர்மாவுக்கு 7 வயது போட்ஸ்வானாவில் வசித்தார். டாக்டர்.ஸ்மித் கொடுத்த சிகிச்சையால் அங்கித் சர்மாவின் நிலையில் பெரிதான முன்னேற்றம் ஏதும் ஏற்படாது போகவே, அங்கித் சர்மாவின் பெற்றோர் 2006 ஆம் ஆண்டு தமது குழந்தையை ஃபரீத் கோட் மையத்தில் சேர்த்தனர். இங்கு வந்த பின்னர் அங்கித் சர்மா சிறிதளவு குணமடைந்ததே டாக்டர்.ஸ்மித் ஃபரீத் கோட்டுக்கு கடந்த ஆண்டு வருகை தரக்காரணமாகிறது.

## வியப்பூட்டும் பின்னணி:

“ஏராளமான பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு காரணமாக அவற்றின் உட்பொருளான பலவகையான கனஉலோகங்கள் கலந்து விட்டதால் பஞ்சாபின் நிலத்தடி நீர் ஏற்கனவே கெட்டுப் போய் விட்டது. இத்தகைய நிலையில் செயல்பாட்டுக் கோளாறு நோய்க்கு யுரேனியம் தான் காரணம் என்று இவ்வளவு விரைவில் முடிவு கட்டுவதற்கு இயலாது. நரம்புத் தொடர்புகளைச் சிதைக்கும் வேதிப் பொருட்களில் ஏதேனும் ஒன்று கூட இதற்குக் காரணமாக இருக்கக் கூடும்” என்கிறார் லூதியானாவின் மகப்பேறியல் மருத்துவர் நீலம் சோதி.

யுரேனியம் குறித்த செய்தி பலருக்கு வியப்பை ஏற்படுத்தியதற்குக் காரணமே பஞ்சாபில் எந்த யுரேனியச் சுரங்கமும் இல்லாத நிலையில் குழந்தைகள் உடலின் யுரேனியம் சேர்ந்தது எவ்வாறு என்பது தான். இது பற்றி பல்வேறு ஊகங்கள் நிலவுகின்றன. ஈராக் போர்முனையில் அமெரிக்க இராணுவம் யுரேனியச் சேர்மம் கொண்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி வருவதால், அங்கிருந்து இங்கு யுரேனியம் பரவியிருக்கக் கூடும் என்பது அத்தகைய ஊகங்களில் ஒன்று.

இலாப நோக்கின்றி செயல்படும் சுரங்கங்கள், தாதுக்கள் மற்றும் மக்கள் என்ற தன்னார்வ அமைப்பைச் சேர்ந்த ஆர். ஸ்ரீதர், அருகில் உள்ள அனல்மின் நிலையங்களிலிருந்து யுரேனியம் வந்திருக்கக் கூடும் என்றார். “அனல்மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரியில் ராடான் மற்றும் யுரேனியம் ஆகியவை அடங்கி இருப்பது அனைவரும் அறிந்த ஒன்று” என்றார் அவர்.

இந்தத் தொடர்பை ஃபரீத் கோட்மையத்தின் இயக்குனர் பிரித் பால் சிங் அவர்களும் உறுதிப்படுத்தினார். பக்கத்து மாவட்டமான பத்தின்டாவில் அனல் மின் நிலையம் ஒன்று செயல்படுகிறது. சேகரிக்கப்பட்ட 149 மாதிரிகளில் 49 மாதிரிகள் பத்தின்டாவில் வசிக்கும் பெரியவர்கள் மற்றும் குழந்தைகளிடமிருந்து சேகரிக்கப்பட்டவை.

இத்தகைய யுரேனியப்படிமங்கள் குழந்தைகள் உடலில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டவுடனேயே தொடர் நடவடிக்கைகள் வேகமடையத் தலைப்பட்டன. கடந்த ஏப்ரல் 6–ஆம் நாளன்று அணுசக்தித்துறையிலிருந்து மூன்று பேர் கொண்ட குழுவொன்று மும்பையிலிருந்து ஃபரீத் கோட் வந்தடைந்தது. “நாங்கள் ஃபரீத் கோட் மையத்திலிருந்து தலை மயிர், மண், தண்ணீர் மற்றும் உணவு மாதிரிகளைச் சேகரம் செய்துள்ளோம் என்றார் இந்த ஆய்வுக்குழுவின் அங்கத்தினரான சுவப்னேஷ் மல்ஹோத்ரா.

மாநில அரசும் ஐந்து பேர் கொண்ட ஆய்வுக் குழுவொன்றை அனுப்பி வைத்துள்ளது. அவர்கள் ஃபரீத் கோட் மையத்தியிருந்து தண்ணீர், மற்றும் மண் மாதிரிகளை எடுத்து லூதியானாவில் உள்ள பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். அந்தக் குழுவினர் அங்குள்ள ஐந்துகுழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்களிடமிருந்து தலை மயிர், குருதி மற்றும் சிறுநீர் மாதிரிகளைக் கூட சேகரித்து மும்பையிலுள்ள பாபா அணுவியல் ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைத்ததாக தன்னையாரென்று வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாத மருத்துவர் ஒருவர் கூறினார்.

தங்களது தலைமயிர் மாதிரிகளில் யுரேனியப் படிமங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் அரசு அனுப்பிய ஆய்வுக் குழுவின் நடவடிக்கைகள் குறித்து கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். “அவர்கள் எங்களது சம்மதம் வேண்டுமென்பதை அவர்கள் ஒரு பொருட்டாகவே கொள்ளவில்லை. அவர்கள் அடிப்படை பண்பாடின்றி உணர்வற்ற பிண்டங்களாகவே செயல்பட்டனர். அவர்கள் எனது குழந்தையைப் பிடித்து இழுத்து அவனது தலைமயிரைப்பிடுங்கினர். அவர்கள் இரத்த மாதிரிகளைச் சேகரித்த போதும் கூட ஒரே உறிஞ்சுகுழலைப்பயன்படுத்தியே எங்களது குடும்ப உறுப்பினர்கள் அனைவரது குருதியையும் சேகரித்தனர்” என்கிறார் தேவீந்தர் சிங். இப்போது அவர்கள் இருக்கும் உச்சக்கட்டக் கோப நிலையில் அரசு மீது வழக்குத் தொடருவது குறித்துக் கூடப் பேசுகிறார்கள். ஆனால் அதில் எவ்விதப்பயனும் இல்லையென்பது அவர்களது ஆரம்பக்கட்டக் கோபநிலை ஆறியவுடனே விளங்கிவிடும்.

**– Down to Earth, 2009**

*Education Material Published on behalf of*

**TamilNadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

No.10, Thomas Nagar, Little Mount, Saidapet, Chennai-600 015
Ph:044-2235 3503, Fax:044-2235 59 05,
E.mail:hrf@md3.vsnl.net.in, Website:www.voicesofstruggletn.org